
# சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

ஜூன் - ஜூலை 2013

தம் பிள்ளைகளுடனான
அன்பின் உறவில்
தேவன் மகிழுகிறவராய் இருக்கிறார்.
ஏனெனில்,
தேவன் அன்பாயிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்











**04** வீடியோ டேப்
நாம் அனைவரும் இறைவனுக்கு முன்பாக நம்முடைய கணக்குகளைக் கொடுக்க வேண்டும்

**06** பணமும் தேவனும்
தேவன் நம்மை ஆசீர்வதிப்பது நம்மால் பிறர் ஆசீர்வாதமாக திகழ்வதற்கே

**10** தியான வாழ்க்கை
வேதாகமத்தைப் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் ஜெபிப்பதற்கும் நேரத்தைச் செலவிடுவோம்

**12** யாருக்காய் நீ வாழ்கிறாய்
நாம் இயேசுவுக்காக வாழ வேண்டும். காரணம் முதலாவதாக அவரே நம்மில் அன்புகூர்ந்தார்.

**16** பரிசுத்த உறவு
கணவன் மனைவி உறவுபோன்றே கிறிஸ்துவுக்கும் சபைக்குமான உறவின் இரகசியம் மிகப் பெரியது

**20** மூன்று நல்ல காரணங்கள்
நமது வாழ்க்கையில் விசுவாசத்தினால் செய்கின்ற பேசுகின்ற அனைத்தையும் தேவன் உறுதிப்படுத்தி நிறைவேற்றுகின்றார்

**25** யாகாசியேல்
உலகத்தால் அதிகம் அறியப்படாத நம்மைக் கொண்டும் தேவன் பெரியக் காரியங்களைச் செய்ய முடியும்



**நிர்வாக இயக்குனர்:**
திரு. மயூக பெரேரா

**முகாமையாளர்:**
திரு. ரவிசங்கர்

**சஞ்சிகை ஆசிரியர்:**
திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்

120 A, Dharmapala Mawatha, Colombo - 07. Sri Lanka. **T:** 4691500, **F:** 2698843, **E:** info@backtothebible.lk, **W:** www.backtothebible.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிர்வாக இயக்குனரிடமிருந்து



நிர்வாக இயக்குனர்
மயூக பெரேரா

"இலவசமான உணவு என்று ஒன்றுமே இல்லை" என்று பொருளாதாரத்தில் கற்பிக்கப்படுகிறது. சிலவேளைகளில் இலவசமாக கிடைப்பதினால், அதற்குரிய பணத்தைச் செலுத்தாமல் உணவு அருந்தினாலும்கூட, யாரோ ஒருவர் அதற்குரிய பணத்தை செலுத்துவதுண்டு.

"இரட்சிப்பு இலவசமானது" என்று எமக்குத் தெரியும். நாம் செய்யும் அல்லது விலை கொடுக்கும் எதுவுமே எமக்கு இரட்சிப்பைக்கொண்டு வராது. அவரை நம்புகிறவர்களுக்கு கிருபையாக கொடுக்கிற தேவனிடமிருந்தே நாம் பெற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்த "இலவச" இரட்சிப்பு மகா பெரிய கிரயத்தினால் கொள்ளப்பட்டது என்பதை நாம் அறிவோம். எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, பிதாவுடன் ஒப்புரவாக வேண்டும் என்பதற்காக, கர்த்தர் பரலோகத்தின் மேன்மைகளையும், வசதிகளையும் விட்டு முழுமையான மானிட வாழ்க்கை வாழ்ந்து காட்டவும், எம் மத்தியில் சேவை செய்யவும், இறுதியில் எமக்காகவும் எம்முடைய பாவங்களுக்காகவும் மரிக்கும்முகமாக இயேசு ஊடாக, வரையறையுள்ள மனு உருவாகுகின்றார். (அப்போஸ்தலர் 16:30-31, ரோமர் 5:8-11, எபேசியர் 2:4-5, 8-9, தீத்து 3:5)

"இலவச இரட்சிப்பு என்று ஒன்றுமே இல்லை!" நாம் இலவசமாக பெற்றுக்கொள்கிறோம். ஆனால் மலிவான ஒன்றல்ல. ஏனென்றால், அது விலையேறப்பெற்ற இயேசுவின் திரு இரத்தத்தினால் விலைக்கு கொள்ளப்பட்டது.

இதனாலேதான் பவுலடிகள், தேவனின் இரக்கங்களை முன்னிட்டு ஜீவ பலியாக எம்மை ஒப்புக்கொடுங்கள் என்று வேண்டிக்கொண்டார் (ரோமர் 12:1-3). எமது அழைப்பிற்கும் சுவிசேஷத்திற்கும் நாம் பாத்திரவான்களாக (தேவ பிள்ளைகளாக) இருக்கும்படியாக, வாழவேண்டும். (எபே 4:1, பிலி 1:27, கொலோ 1:10, 1தெச 2:12) அவரது உதவியுடன், எம்மால் வாழ முடியும்.

நல்லதோர் "கொடுக்கல் வாங்கலை" நாம் விரும்புவோம். அப்படித்தானே? "ஒன்றுமே கொடுக்காமல் ஏதாவது ஒன்றை பெற்றுக்கொள்ளவோ" அல்லது "குறைந்த செலவிற்கு அதிகமான பெறுமதியை பெற முடியுமானால், எங்களில் யார் சந்தோஷமடையாமல் இருப்போம்?

இப்படியான கொடுக்கல் வாங்கல்களிலே எமக்கு உண்மையிலேயே தேவையற்ற அல்லது வேண்டாத பொருட்களையும்கூட சிலவேளைகளில் விலைக்கு கொள்வதை நான் அவதானித்திருக்கிறேன்.

இலவசம் என்பதனால் அல்ல. எமக்கு தேவையான ஒன்று என்பதினாலேயே நாம் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறோம். சுவிசேஷத்தைக் குறித்து இன்னுமொரு விடயம் என்னவென்றால், அது ஓர் அரிதான ஒரு வளம் அல்ல. எல்லோருக்கும் போதுமானதாக இருக்கின்றது.

சுவிசேஷத்தின் நன்மையை ஒருவர் பெற்றுக்கொள்வது இன்னுமொருவர் அதை பெற்றுகொள்ள இடையூறாக ஒருபோதும் இருக்காது. அப்படிச் செய்வதற்காக இயேசு இன்னும் அதிக விலையை செலுத்த வேண்டியதில்லை.

ஆனால், எல்லாம் இதைப் போன்றது இல்லை. பொருட்கள் அரிதானவை. ஒருவர் ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், இன்னொருவர் அப்பொருள் கிடைக்காமல் இருக்க வேண்டியிருக்கும். இருவருக்குமே அப்பொருள் கிடைக்க வேண்டுமானால், மேலதிகமான விலையைச் செலுத்தி அதிகளவு தயாரிக்க வேண்டியிருக்கும்.

திருமறைக்குத் திரும்புவோம் ஊழியத்திலும் அதன் வளங்களிலும் இவ்விதமான ஒரு நிலைமையே உள்ளது. நாம் தயாரித்து விநியோகித்துவரும் அநேக வளங்கள் இலவசமாக அல்லது குறைக்கப்பட்ட விலைக்கு (மானிய விலை) (சஞ்சிகை தியானநூல் போன்றவை) கொடுத்தாலும், அதற்குரிய விலையை ஒருவர் செலுத்த வேண்டியுள்ளது. எமது ஊழியத்தின் தேவைகளை, தேவனுக்குக் கீழ்ப்படிவுள்ள அநேகர் மூலமாக, பூர்த்திசெய்ய தேவன் சந்தித்தமையினால் அவருக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம்.

இல்லாதவர்கள் பெற்றுக்கொள்ளும்படியாக, உள்ளவர்கள் கொடுக்க வேண்டுமென்பதே நியாயமானது. (அப் 4:34 *அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றுங் குறைவாயிருந்ததில்லை. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, 35. அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொடுக்கப்பட்டது*) அதனிலும் சிறந்தது என்னவென்றால், தங்கள் நிறைவிலிருந்து கொடுப்பதைக் காட்டிலும், தமது இல்லாமையிலிருந்தும் குறைவிலிருந்தும் மக்கள் கொடுப்பதே சிறப்பான ஒன்றாக காண்கின்றோம் (2கொரிந்தியர் 8:2 *அவர்கள் மிகந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். 3. மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். 4. தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். 5. மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்*) (எப்பொழுதும் இம்மாதிரியான, உண்மையும் தியாகமுமான கொடைகளைக் காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் என உறுதிப்பட நான் கூறுவேன்)


ஆனாலும், உள்ளவர்கள், இன்னும் அதிகம் பெற்றுக்கொள்ளவும், முடியுமான அளவிற்கு குறைவாக கொஞ்சத்தை மட்டும் கொடுப்பதும் நியாயமற்றதாகவே தென்படுகின்றது. நீங்கள் என்ன சிந்திக்கிறீர்கள்? அனைவருமே சிறந்த கொடுக்கல் வாங்கல்களை விரும்புகின்றார்கள். ஆனால், இவ்வித கொடுக்கல் வாங்கலானது, உண்மையிலேயே சிறந்ததா?

இக்காரியத்திலும்கூட, நாம் தேவனுக்கு பாத்திரமானவர்களாக வாழ்கின்றோமா இல்லையா என்பது எம்முடைய சிந்தனை செயற்பாடுகளில் பிரதிபலிப்பாக அமைகிறது. அவரது உதவியுடன் எம்மால் முடியும். நாம் அப்படியே வாழவேண்டும்.

கிறிஸ்துவுக்குள்,

MAYUKHA

மயூக பெரேரா



ஒரு வீடியோ டேப்பில் பதிவுசெய்த நிகழ்ச்சிகளை ஒரு திரையில் இயக்கினால், நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே மீண்டும் துல்லியமாகப் பிரதிபலித்துக் காண்பித்துவிடும்!

நாம் அனைவரும் இறைவனுக்கு முன்பாக நம்முடைய கணக்குகளைக் கொடுக்க வேண்டிய "ஒருநாள்" வர இருக்கின்றது என வேதாகமம் கூறுகிறது! நாம் செய்த; பேசிய; சிந்தித்த ஒவ்வொன்றையும் இறைவன் எப்படி பதிவுசெய்து வைக்கமுடியும்? என்று நாம் ஆச்சரியப்படக்கூடும்! ஆம், இந்தப் பதிவை ஒவ்வொரு மனிதனுக்குள்ளிருக்கும் "வீடியோ டேப்", "மெமரி காட்" போன்ற ஞாபகசக்தியிலேயே இறைவன் வைத்திருக்கிறார்!

ஒருவன் இறக்கும்போது, அவன் தன்னுடைய சரீரத்தை மண்ணுக்கு விட்டுச்சென்றாலும், ஞாபக சக்தியை உள்ளடக்கிய ஆத்மாவானது மரித்தஆவிகள் இருக்கும் இடத்திற்கே போகிறது. கடைசியில், இந்த உலக நியாயத்தீர்ப்பின் நாள் வரும்போது, அவனது ஆத்துமாவானது, முன்பு பூமியில் சரீரமாக இருந்த அந்த "மண்ணோடு" இணைக்கப்படும். அப்போது அவன் தன் இயல்பான சரீரத்துடன் எழுப்பப்பட்டு இறைவனுக்கு முன்பாக தன் வாழ்க்கையின் முழுக் கணக்கையும் ஒப்புவிக்கும்படி நிற்பான். அந்நாளில் ஒவ்வொரு மனிதனுக்கும் நியாயத்தீர்ப்பின் முறைவரும். இறைவன் அப்போது என்னசெய்வார்? ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஞாபகசக்தியின் வீடியோ டேப்பினை அவனவன் பகிரங்கமாய் காணும்படி ஒரு திரையில் இயக்குவார்! அந்த மிகத் துல்லியமான "காட்சி" குறித்து ஒருவராலும் மறுகேள்வி கேட்கவே முடியாது. ஏனெனில், அவைகள் அனைத்தும் அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த உண்மை சம்பவங்களின் தொகுப்பு நிறைந்த நிகழ்ச்சிகள்தான்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆம்! மனிதர்களின் மேற்பூச்சான ஒழுக்கம், தெய்வபக்தி போன்ற போர்வைகள் அன்று களைந்து எறியப்பட்டு, உண்மை உள்மனிதன் வெளிப்படுத்தப்படு வான். அந்நாளில் மதம் ஒருவரையும் காப்பாற்றவே முடியாது. அவர்கள் எந்த மதம், இனம், மொழி பழக்க வழக்கங்களை அனுசரித்தாலும், "எல்லோரும்" பாவம் செய்தவர்கள் என்று தெளிவாய் புலப்பட்டு விடும்! ஒருவர் செய்த நற்கிரியைகளோ, அவர்கள் ஆலயத்திற் குக்கொடுத்த காணிக்கை தசமபாக பணமோ அன்று அவர்களை இரட்சிக்க முடியாது.

நம் பாவச்செயல்கள் இறைவனின் பார்வையிலி ருந்து நிரந்தரமாய்த் துடைத்து அழிக்கப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு. நம்முடைய நற்கிரியைகள் நாம் செய்த தீயசெயல்களைத் துடைத்து அழிக்க முடியாது. ஒருக்காலும் முடியாது! நாம் செய்த பாவங்களுக்காக, இறைவனின் சட்டத்தில் ஒரே ஒரு தண்டனை வரைய றுக்கப்பட்டுள்ளது என்று வேதாகமம் கூறுகிறது. அது மரணம்! நம்முடைய பாவத்திற்காக இந்த நித்திய மரணமடையவே நாம் பாத்திரர்களாய் இருக்கின்றோம்.

இந்த நித்திய மரணமாகிய தண்டனையில் இருந்து நம்மைக் காக்கவே, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து இம்மண்ணுலகுக்கு மனிதனாக வந்து, 2000 வருடங்களுக்குமுன் எருசலேம் பட்டணத்திற்கு வெளியே, மனுக்குலத்தின் பாவத்திற் குரிய தெய்வீக தண்டனையை தன்மேல் ஏற்றுக் கொண்டு ஒரு சிலுவையில் மரித்தார். கல்லறையில் வைத்து அடக்கம்பண்ணப்பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மரித்தோரிலிருந்து உயிருடன் எழுந்து வந்து, உண்மையாகவே தான் தேவகுமாரன் என்றும் நிரூபித்தார். இவ்வாறு மனிதனின் மிகப்பெரிய எதிரி யான மரணத்தை, சாத்தானை இயேசு ஜெயித்தார். அவர் உயிர்த்தெழுந்து பரத்திற்கு செல்லும்போது, தான் மீண்டும் பூமிக்கு குறிப்பிட்ட வேளையில் எல்லா மனிதரையும் நியாயந்தீர்க்கும்படி வருவேன் என்றும் வாக்களித்துள்ளார். இவ்வாறு வாக்களித்தது, 2000 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆம்! அவர் இந்தப் பூமிக்கு வரும் காலம் மிகவும் சமீபித்துவிட்டது!!

இவ்வுலக வரலாற்றில் மனிதவர்க்கத்தின் "பாவங்களுக்கென்று மரித்த" ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே! மேலும் மரித்தோரிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்தவரும் அவர் ஒருவரே! இந்த இரு காரியங்களிலும் அவர் ஒப்பற்றவராய் இருக்கிறார்.

இன்று நாம் "உண்மையாகவே" நம்முடைய பாவங்களை விட்டு விலகி, நாம் மனந்திரும்பவேண்டும். மேலும், அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்தார் என விசுவாசித்து, கிறிஸ்து இயேசு மூலமாய் இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்கவேண்டும். இவ்வாறு செய்தால் மாத்திரமே, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு "அவை" நமக்குள் இருக்கும் வீடியோ டேப்பிலிருந்து அழிக்கப்பட முடியும். இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தம் நம் பாவங்களைக் கழுவி நீக்கிவிடும் என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. பிறகு இவ்வுலகில் இறைவனின் பிள்ளையாக ஓர் தூய்மை யான வாழ்க்கையை நீங்கள் வாழலாம்!

மனித வர்க்கத்திற்கென்று இந்த ஒரே வழியான இரட்சிப்பைத்தான் இறைவன் நியமித்திருக்கிறார். அதை இப்பொழுதே பெற்றுக்கொள்ளுங்கள். இந்த மெய் சத்தியங்களை அறிந்திருப்பதினாலும் பாவிகளுக் கென்று வைக்கப்பட்டிருக்கும் " நரக அக்கினிக்கடலில்" தள்ளப்படும் நித்திய நியாயத்தீர்ப்பின் அபாயத்தை உணர்ந்திருப்பதினாலும் ஒவ்வொருவரையும் அன்பாய் எச்சரிக்க வேண்டியது எம் கடமையாய் இருக்கிறது.

இறைவன் அருளிய இச்செய்தியை, உண்மை யான அன்பினால் நிறைந்து உங்களுக்கு வழங்குகின் றோம். தயவாய் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ளுங் கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணமும்



நமது அன்றாட வாழ்க்கையில் பணம் மிக முக்கியமானது. நாம் பணத்தை பெற்றுக் கொள்ள பல வழிகளை கையாள்கிறோம். பல மணிநேரத்தை வியாபாரத்தில் தொழிலில் செலவிடுகிறோம். இன்று பணத்தைச் சம்பாதிக்கவும் அதைச் சேமிக்கவும் பல ஆலோசனைகள் கொடுக்கப்படுகின்றன. பலநேரங்களில் பணத்தை வைத்தே இன்று உலகமும் அதில் உள்ளவைகளும் அளவிடப்படுகிறது. பணம் ஒரு வலிமை யான சக்தி படைத்தது. அதனுடைய ஆற்றலும் வல்லமையும் அற்பமானதுமல்ல. அதன் மிகுதியினால் பெரிய பெரிய திருப்பங்களும் சாதனைகளும் ஏற்படமுடியும். சிலர் அதிக ஆன்மீகவாதிகளாக மாறி பணத்தை குப்பையென்றும் தூசியென்றும் அது எதற்கும் உதவாது எனக்கூறி விடுவதுண்டு. ஆனால் பணம் குப்பையோ தூசியோ அல்லது எதையும் செய்ய உதவாததோ அல்ல. அது மனிதனுக்கு தேவையான ஒன்றே.

இந்தப் பணத்தை குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் ஆலோசனைகளையும் வழிமுறை களையும் சற்று ஆராய்ந்து பார்ப்போம். “பூமியும் அதன் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது” என்று சங்கீதம் கூறுகிறது (சங்கீதம் 24:1). இறைவனே அனைத் தையும் ஆளுகை செய்கின்றார். நாம் பணத்தை சம்பாதிக்கவும் அதை அநுபவிக்கவும் அவரே நமக்கு அருள்செய்கிறார். அதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு தேவமனிதன் இப்படி யாக இறைவனிடம் வேண்டுதல் செய்கிறான். “இறைவனே! நான் செல்வந்தனாகி பரிபூரணம் அடைகிறதினால் உம்மை மறுதலித்து நீர் எனக்கு யார்? என்று சொல்லாதபடிக்கும் தரித்திரப் படுகிறதினால் திருடி உம்முடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.” (நீதிமொழிகள் 30:9) இறைவனுடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும் என்று வசனம் கூறுகிறபடி நாம் சம்பாதிக்கும் எல்லாவற்றிற்கும் அவருக்கு நன்றியும் கனமும் செலுத்தி வாழ்வது அவசியமாயிருக்கிறது.

நமது அன்றாட ஜீவியத்திற்கு உணவு உடை உறைவிடம் எப்படி அவசியமோ, அதைப்போலவே அவைகளைப் பெற்றுக்கொள்ள பணமும் அவசியம். அதைவேளையில் பணமே நம்மை வாழ வைத்துவிடும் என்றும் பணத்தால் நம்முடைய தேவைகள் யாவும் சந்திக்கப்பட்டு வாழ்வு சுகமாய் இருக்கும் என்றும் எண்ணி பணத்தைச் சேர்ப்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்துவது மிகத் தவறானது. பணத்தை மனிதனே உண்டாக்கினான். ஆகவே பணம் சேர்ப்பதற்கே நம்முடைய முழு நேரமும் கவனமும் செல்லுமானால் அது வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கிவிடும். பணத்திற்கப்பால் நமக்கு அவசியமான பலவிடயங்கள் உள்ளன பணத்தின்முலம் நமது வாழ்க்கையின் அனைத்து தேவைகளையும் நாம் பெற்றுவிட முடியாது. நம்முடைய உள்ளத்திற்கு அன்பு அமைதி நம்பிக்கை தெளிவு தைரியம் நிறைவான சந்தோஷம் திருப்தி போன்ற பல விடயங்கள் தேவைப்படுகின்றன. இவைகளை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இறைவனோடு நாம் நல்ல உறவைப்பேண வேண்டும். அந்த உறவின் முக்கியத்தை அல்லது மேன்மையை உணராமல் பணமே எல்லாம் என்ற உணர்வோடு நாம் செயல்பட்டால், அது வாழ்க்கையின் நோக்கத்தை இழந்தவர்களாக, மகிழ்ச்சியை இழந்தவர்களாக பல தீமைகளை வரவழைக்கும் செயலாக மாற்றிவிடும்.

பரிசுத்த வேதாகமத்தில் இதற்கு ஒரு நல்ல உதாரணமுண்டு. உலகில் வாழ்ந்த எல்லா ராஜாக்களிலும் பார்க்க மிகுதியான ஞானமும் புத்தியுமுள்ள ஒருவர் தான் சாலொமோன் ராஜா. இறைவன் இவருக்கு கொடுத்த இந்த ஞானத்தின் நிமித்தம் உலகில் பல தேசங்களிலிருந்தும் ராஜதந்திரிமார் வருவார்கள். இவருடைய கீர்த்தி உலகெங்கும் பரவியிருந்தது. அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான். ஆயிரத் துக்கும் மேலான பாடல்களை பாடியிருந்தான். ஆரம்ப காலத்தில் தன் தகப்பனாகிய தாவீது ராஜாவைப்போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனும்

- ஏழாலையூரான்

பணமும் தேவனும்

இறைவனோடு நல்ல உறவைப் பேணுபவனாகவும் ஐக்கியமுள்ளவனாகவும் வாழ்ந்து இறைவனுக்கென்று ஒரு பெரிய தேவாலயத்தை எருசலேமில் கட்டினான். ஆனால் அவது வாழ்நாளின் இறுதிநாட்களில் அந்நிய ஜாதியாரான ஸ்திரீகளிடம் உறவுவைத்ததினால் அவனது இருதயம் வழுவிப்போனது. அந்நிய தேவர்களுக்கு மேடைகளைக் கட்டி பலி செலுத்தினான். முடிவில் இறைவனுக்குப் பயப்படுவதைவிட்டு தன் மனம்போன போக்கில் தன் ஞானத்தை நம்பி வாழ்ந்து மோசம் போனான். இறைவனுடைய உறவின் அவசியத்தை சரியாக உணர்ந்து அதைத் தேடாமல் மிகுந்த செல்வங்களினால் தனது வாழ்க்கையை அதிக சுகமாக்கிக் கொண்டதினால் முடிவில், "மாயை, மாயை! எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமே!" என்று அவனால் புலம்பத்தான் முடிந்தது. ஆகையால் பணத்தையே மிகப் பிரதானமாக எண்ணி அதனை நோக்கியே ஓடத் தூண்டும் நம்முடைய மனநிலைத்தான் மாறவேண்டும். இறைவனோடு நாம் கொள்ளும் உண்மையான உறவினால் கிடைக்கும் ஆசீர்வாதம் மட்டுமே நமது உள்ளத்தின் தேவைகளை சந்திக்கும் என்ற உண்மைக்கு உரிய கவனம் செலுத்தவேண்டும்.

செல்வந்தனாக வேண்டுமென்ற ஆசை அநேகரை அழிக்கிறது. இது தங்களைத் தாங்களே உருவக் குத்திக்கொள்ளும் மதியீனமாக மாறும். ஒரு மனிதன் நல்ல ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று விரும்பினால் அது நல்லது. அதற்கு தேவையான உணவைத் தேடுவது அவசியமானது. ஆனால் "நன்றாக உண்பதே" ஒரு மனிதனது இலக்காக மாறினால் அவன் உண்ணும் உணவே அவனுக்கு பல தீங்கைக் கொண்டுவரும். பண விடயத்திலும் அப்படியே. "பணம் பணம் பணம்" என்று அலைகின்ற பலர் குடும்ப ஐக்கியம் பிள்ளைகளின் ஒழுங்கு சரீர நலன் மற்றும் பிறதேவையான விடயங்களுக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவம் யாவற்றையும் மறந்துவிடுகின்றனர். எதிர்பார்த்த அளவு பணம் வருகின்றது. ஆனால் குடும்ப சூழ்நிலைகளிலே சரீர நிலைகளிலே உறவுகளிலே பல வேதனையான காரியங்களைக் காணநேரிடுகிறது. ஓடி ஓடிச் சேர்த்த பணத்தினைக்கொண்டு சந்தோஷமாக அவர்களினால் வாழ முடியவில்லை.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தனது குடும்பத்தை நடத்த போதுமான வருவாயிருந்தும் தனது ஊரிலுள்ள சிலரைப்போல பணக்கார நிலைமைக்கு வருவதற்கு ஆசைப்பட்ட ஒருவர் பல முயற்சிகள் செய்து வெளிநாடு சென்றார். நல்ல செல்வநிலையை அடையவேண்டும் என்ற ஆசையில் பல ஆண்டுகள் அங்கேயே தங்கி ஏராளமாய்ச் சம்பாதித்தார். இனி ஊரில் போய் ஜாம் ஜாம் என்று வாழலாம் எனக் கனவுகண்டு ஊருக்கு வந்தார். அங்கே வந்து செல்வநிலையில் பூரித்த அவரது குடும்ப நிலைமையைக் கண்டு மனமுடைந்துபோனார். மனைவி வழிதவறி போயிருந்ததையும் தன் பிள்ளைகள் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்வதையும் கண்டு மனம் வெறுத்துப்போனார். காரணம் என்ன? பணஆசை. பணம் சேர்ப்பதே குறியாக மாறியதால் மனைவி வழி தவறுவதற்கும் பிள்ளைகள் சீர்கெட்டுப் போவதற்கும் அவரே காரணமானார். பலவருடங்களாக பட்டபிரயாசம் அவரது வாழ்க்கைக்கு முட்களாக மாறியதேயன்றி அவர் எதிர்பார்த்த சுகத்தையோ கொடுக்கவில்லை. "பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கின்றது" என்ற வேதவாக்கியம் எவ்வளவு உண்மையானது (1தீமோத்தேயு 6:10).

வேதாகமம் கூறுகின்ற ஆலோசனை என்னவெனில்: "ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே. சுயபுத்தியை சாராதே. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்க விடுவானேன்? அது கழுகைப் போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ப் பறந்துபோம்"(நீதிமொழிகள் 23:4-5). பணம் என்ற ஒன்று மனிதனை எவ்வளவு இழிவான பிறவியாக மாற்றிவிடுகிறது. பெண்ணாசை பதவியாசை மண்ணாசை போன்ற சோதனைகளை வென்ற பலர் பணஆசையில் சிக்குண்டு சீர்கெட்டுள்ளார்கள். உலக ஆன்மீகத் தலைவர்களும்கூட இந்த மாயையான சோதனைக்குள் அகப்பட்டிருப்பதும் நாம் அறிந்ததே. பணம் ஒரு தண்ணீர் போன்றது. அது அவசியமானது. ஆனால் அதை அளந்துதான் உபயோகிக்கவேண்டும். தண்ணீர் அதிகமாகும்போது அதனுடைய ஆழங்களில் சிக்கி, மனிதன் அழியவும் வாய்ப்புண்டு. பணமில்லாதவர்களைவிட பணம் மிகுந்தவர்கள்தான் அதிகமான சீர்கேடுகளையும் சீரழிவுகளையும் காண்கிறார்கள். சர்க்கரை இனிப்பானது. அதிகமாகிவிட்டால் அதுவே உடலுக்குக் கசப்பானது. பணத்தின் தன்மையும் அதுவே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலர் சுவிஸ் வங்கிகளில் பல்லாயிரம் கோடிரூபாய்களை யாருக்கும் தெரியாமல் சேமித்து வைத்திருப்பது இந்தியாவிலுள்ள ஒரு சஞ்சிகையில் அம்பலமாகியது. தினமும் 50 ரூபாய் வருமானம்கூட இல்லாமல் ஆயிரக்கணக்கானோர் அல்லல்படு கின்ற அதே நாட்டில் பலர் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை எந்த பயனுமின்றி எங்கெல்லாமோ சேர்த்து வைத்துள்ளமை எவ்வளவு வேதனையான காரியம். பலரது வங்கிச் சேமிப்புக்கள் யாருக்கும் பயன்தராமல் போயுள்ளன. சேர்த்தவர் களும் பயனடையவில்லை. யாருக்காகச் சேர்க்கப்பட்டதோ அவர்களும் பயனடைய வில்லை. உடலுக்குள் வாழும் உயிருக்கு எந்த உத்தரவாதமும் பெற்றிராத மனிதன் சம்பாதிப்பதிலும் வீணாக சேமிப்பதிலும் எவ்வளவோ கரிசனையாயிருக்கின்றான்.

இயேசு இவ்வாறு கூறுகின்றார்: 'பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். மேலும் ஒரு உவமையையும் கூறினார். ஒரு ஐசுவரியமுள்ள மனிதனின் நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங் களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே. ஆம் நான் ஒன்றுசெய்வேன். என் களஞ்சியங்களை இடித்து பெரிதாக கட்டி எனக்கு விளைந்த தானியங்களையும் பொருட் களையும் அங்கே சேர்த்துவைத்து பின்பு என் ஆத்துமாவே, உனக்காக அநேக வருடங்க ளுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது: நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக்கொண்டான். இறைவனோ அவனை நோக்கி: மதிகேடனே! உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்' என்றார். (லூக்கா 12:15-21). தேவனுடன் சரியான உறவு இல்லாமல் தனக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவர்கள் இப்படியே இருக்கிறார்கள். உண்மையில், பணம் ஒரு சாபமல்ல. அதைச் சரியான விதத்தில் பயன் படுத்தினால் அது ஆசீர்வாதமே. அதை உரியவிதத்தில் பயன்படுத்துவோம். இல்லையேல் அது எமது வாழ்வில் சாபமாக மாறிவிடும்.

இன்றே சற்று எமது வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்போம். நாம் எதற்கு முதலிடம் கொடுக்கின் றோம்? பணத்திற்கா? நமது வாழ்க்கைக்கா? இந்தப் பூவுலகில் இறைவன் நமக்களித்த வாழ்க்கை யில் எப்படி நாம் வாழ்கின்றோம்? இன்றே நமது வாழ்வை பயனுள்ளதாக்குவோம். தன்னலம் பாராமல் பிறர்நலத்தில் அக்கறை கொள்வோம்.

உண்மையான காரியம் என்னவென்றால், தேவன் நம்மை ஆசீர்வதிப்பது, நம்மால் பிறர் ஆசீர்வாதமாக இருப்பதற்கே. சில பெரிய பணக்காரர்கள் தங்களின் சொத்துகளில் பெரும்பகுதியை மக்கள் நலனிற்காக செலவிடுகிறார்கள். எல்லாரும் பணக்காரரைப்போல நிறைய சம்பாதிக்க முடியாதுதான். ஆனால் நாம் நம்மிடமிருப்பதில் எத்தனை சதவீதம் பிறர் பயன்படும் விதத்தில் செலவிடுகிறோம் என்பது முக்கியமான கேள்வி. ஏழைக்கு இரங்குகின்றவன் இறைவனுக்கு கடன் கொடுக்கின்றான் (நீதிமொழிகள் 19:17) தேவ வார்த்தையின்படி ஏழை எளியவர்களைத் தாங்குவோம். அதுவே இறைவனுக்குப் பிரியமானது. இறைவன் எங்களையும் எங்கள் சந்ததியையும் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிப்பார்.

"இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கின்ற
உங்கள் இறைவனை மகிமைப்படுத்தும்படி
உங்கள் வெளிச்சம் (வாழ்க்கை)
மக்கள் முன் பிரகாசிக்கக்கடவது." (மத்தேயு 5:16).

கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் நற்கிரியைகளையும்
ஆசீர்வதித்து உங்களை வழிநடத்துவாராக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவருடைய பணிக்கு அழைப்புப்பெற்றவர்கள்

## சிந்திக்க வேண்டியதும் சிந்திக்க வேண்டாததும்

எப்படிப் போவேன் என்று சிந்திக்க வேண்டாம்
எவ்விதம் நிலைத்திருப்பேன் என சிந்தியுங்கள்

அழைப்பு எனக்கு இருக்கிறதா என கேட்கவேண்டாம்
நான் அவருடைய சீடன்தானா எனக் கேளுங்கள்.



எவ்வளவு காலம் காத்திருப்பது எனக் கேட்கவேண்டாம்
எவ்வளவு சீக்கிரம் புறப்படுவேன் எனக் கேளுங்கள்

இது முடியுமா என சிந்திக்காமல்
தேவன் சர்வ வல்லவர் எனக் கூறுங்கள்

நான் பலவீனன் எனக் கூறவேண்டாம்
அவர் சர்வ வல்லவர் எனக் கூறுங்கள்.

நான் எதையும் சாதிக்கமுடியாது என்று கூறாது
கிறிஸ்து எல்லாவற்றையும் செய்வார் எனக் கூறுங்கள்.

சோதனையைக் கண்டு அஞ்சுகிறேன் என்று தயங்காமல்
அவர் அதினின்று இரட்சிக்க வல்லவர் என்று கூறுங்கள்

எதை இழந்துவிட்டேன் என்று பேசாது
எதை ஆதாயம் செய்திருக்கிறேன் எனக் கூறுங்கள்.

கடுமையான வாழ்க்கையைக் கண்டு அஞ்சுகிறேன் என்று கூறாது
துன்பம் அனுபவித்தால் ஆளுகை செய்வேன் எனக் கூறுங்கள்.

விரைவில் மரித்துவிடுவேன் எனக் கூறாது
அப்படியாயின் பரலோகில் இன்னும் அதிக காலம்
எனக்கருதுங்கள்

நண்பர்கள் போற்றுவாரோ என்று கூறாது
தேவன் அங்கீகரிப்பாரா எனக் கேளுங்கள்

எவ்வளவு சம்பளம் எனக்குக் கிடைக்கும் என்று கூறாது
வேதப் புத்தகம் எனது காசோலை எனக் கூறுங்கள்

ஐயோ எனக்குத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதே என கூறாதேயுங்கள்
ஏனெனில் துணைவிக்கும் அழைப்பு உண்டு


தாலந்து ஏதும் கிடையாது என்று கூறவேண்டாம்
கிறிஸ்து எனக்கு ஞானம் எனக் கூறுங்கள்

அனுபவம் ஏதும் இல்லை என்று கூறவேண்டாம்
ஏனெனில் கிறிஸ்துவிடம் அது தாராளமான உண்டு.

விசுவாசம் எனக்கு இருக்கிறதா என்று கேட்கவேண்டாம்
ஆனால் சந்தேகம் பாவம் எனக் கூறுங்கள்

பேச்சுத்திறன் எனக்கில்லை என்று கூறவேண்டாம்
வாயைப் படைத்தது யார் என்று எண்ணுங்கள்

வெறும் மதவெறியனாக மாற விரும்பவில்லை என்று கூறாது
என்னை அக்கினி பிழம்பாக மாற்றும் என்று கூறுங்கள்.



**சி.டி.ஸ்டட்.**

நன்றி: ஜாமக்காரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1

# தியான வாழ்க்கையின் அவசியம்

கிறிஸ்தவர்களுக்கு இன்று என்ன குறை நேர்ந்து விட்டது என இக் கேள்வியைத் தேவனுடைய மக்களே கேட்கின்றனர். ஏனெனில் சபைகள் பலவற்றிலும் வளர்ந்து வரும் அசட்டையும் அலட்சியமும் அபாய நிலையை எட்டுவ தைக்கண்டு போதகர்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர். ஜெபக் கூட்டங்களுக்கு வருவோரின் எண்ணிக்கையும் வேகமாகக் குறைந்து வருகின்றது. உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ முழுநேரப் பணியாளர்களாக ஊழியஞ் செய்வதற்கு முன்வரும் வாலிபர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து விட்டது! ஆவிக்குரிய தரிசனம் மங்கி வருவதாகக் காணப்படுகின்றது. ஏன் இந்த நிலை?

இதற்கான காரணங்கள் பலவாக இருக்கலாம். எனினும் அதற்குரிய பரிகாரத்தை கண்டுபிடிப்பது கடினம் அல்ல. பெரும்பாலான கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பதுதான் இதற்கெல்லாம் அடிப்படை யான முதற் காரணமாகும். அவர்கள் நம்முடைய கர்த்தரின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ச்சியடை யாமல் குன்றிப்போய் இருக்கின்றனர். ஆகிலும் முன்பு கூறிய படியே, இதற்கு விமோசனம் உண்டு. அது நம்முடைய உள்ளான மனுஷனில், ஆவிக்குரிய ஜீவியத்தில், பரிசுத்த ஆவியானவருக்குப் பூரணமான ஒத்துழைப்பைக் கொடுப்ப தைப் பொறுத்துள்ளது. நாம் தேவனுடைய வசனத்தைக் கருத்துடன் வாசித்து, தியானித்து, ஜெபிப்பதன் மூலமாக இது நிறைவடைகின்றது.

இவ்வாறு வேதாகமத்தைப் படிப்பதற்கும், சிந்திப்ப தற்கும், ஜெபிப்பதற்கும் தங்களுக்குச் சமயம் கிடைப்ப தில்லை என்று சிலர் குறை கூறுகின்றனர். ஆனால் இதே மறுப்பு எனது உள்ளத்தில் தோன்றியபோது நான் கண்டு பிடித்த முறையை உங்களுக்கும் பரிந்துரைக்கின்றேன். ஒரு பென்சிலும் சில காகித தாள்களையும் எடுத்துக்கொண்டு கீழ்காணும் நான்கு வித்தியாசமான காரியங்களை குறித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியான வாழ்க்கையின் அவசியம்

முதன்முதலாக, ஒருநாளில் நீங்கள் செய்யக்கூடிய எல்லா காரியங்களின் பட்டியலொன்று தயாரித்துக் கொள்ளுங்கள். அவை ஏராளமாக இருந்தாலும் பரவாயில்லை. எல்லாவற்றையும் சற்றுப் பொறுமையுடன் குறித்துக் கொள்ளுங்கள். இடைக்கிடையே அல்லது பல நாட்களுக்கு ஒருமுறை மாத்திரம் செய்யக்கூடிய வேலைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, வேறொரு தாளில் இக்காரியங்களை அவைகளின் முக்கியத்துவத்திற்கேற்ப பிரித்து, வரிசைப்படுத்தி எழுதுங்கள். இதற்கு நேரமும், சிரமமும் ஆகும். என்றாலும் இவ்வாறு சரியாக வகைப்படுத்துவது இன்றியமையாதது.

மூன்றாவதாக, இவ்வாறு கிரமமாக ஒழுங்குபடுத்தப்பட்ட காரியங்களுக்கு, அவைகளின் முக்கியத்திற்கேற்ப எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அரை மணி நேரமா? ஐந்து நிமிடங்களோ என்பதை எண்ணிப் பார்த்துக் குறித்துக்கொள்ளுங்கள்.

நான்காவதாக, அவற்றுள் தேவையற்ற, தவிர்க்கக்கூடிய காரியங்களைத் தவிர்த்துவிட்டு, அந்த நாளின் காலை அட்டவணையில் அவசியமான காரியங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். இவற்றுள் எல்லாம் தேவனோடு உள்ள உங்களது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியே பிரதானம் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

நீங்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அவற்றிற்கு செலவிடவேண்டிய சமயத்தையும் குறிப்பிடும் ஓர் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. இது ஓர் உதாரணத்திற்கு தரப்பட்டுள்ள பட்டியலே தவிர, இதனைத்தான் கடைபிடிக்க வேண்டுமென்ற நிபந்தனையில்லை. அவரவருடைய தொழிலுக்கும், சூழ்நிலைக்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளலாம். மேலும் சிலர் தேவ வார்த்தையைப் வாசித்து சிந்திக்கவும் ஜெபிக்கவும் அதிக நேரம் செலவிடக்கூடும். அவர்கள் இப்பட்டியலைப் பார்த்து இவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டாம். எவ்வித ஒழுங்குமுறைகளும் இல்லாதவர்களுக்கும்கூட இப்பட்டியல் பயனளிக்கும் எனும் எண்ணத்தில் இது தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வேலை | 8 மணி நேரம் |
| நித்திரை | 8 மணி நேரம் |
| உணவருந்துதல் | 1½ மணி நேரம் |
| வேலை ஸ்தலத்துக்குப் போகவும் வரவும் | 1 மணி நேரம் |
| குடும்பத் தியானம் | ¼ மணி நேரம் |
| செய்தித்தாள் வாசித்தல் | ¼ மணி நேரம் |
| வானொலி செய்தி கேட்டல் | ¼ மணி நேரம் |
| பொழுதுபோக்கு | 2 மணி நேரம் |
| எதிர்பாராத வேலைகள் | 1½ மணி நேரம் |
| பிள்ளைகளோடு பேசி மகிழ்தல் | ¾ மணி நேரம் |
| தனித்தியானம் | ½ மணி நேரம் |



இன்று வணிக வியாபாரத் துறையிலுள்ள சிலர் முக்கியமான காரியங்களைச் செய்வதற்குரிய சமயமே கிட்டாமல் திண்டாடுகின்றனர். ஏனென்றால் அநாவசியமான வேலைகளில் அதிகமாகத் தலையிடுவதால், மிகத் தேவையானவற்றிற்குரிய நேரத்தை இழந்துவிடுகின்றனர். இவ்வாறு இருப்பது ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பெருந்தீங்கு விளைவிக்கும்.

அநேகர் உலக காரியங்களில் அதிகமாக ஈடுபட்டு, தேவனோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் கடமையை மறந்துவிடுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில், நான் தேவனோடு தொடர்புகொள்வதற்காக சமுதாய சம்பிரதாயங்களையும் மற்றும் பல நலமான காரியங்களையும் கூட விட்டுவிட்டேன். அதன் மூலம் என் உள்ளான மனுஷனில் புதுப்பொலிவும் பெலனும் அடைந்தேன். எனவே ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கு சில கட்டுப்பாடுகள் அவசியம் என்பதையும் சிலவற்றை தள்ளிவிடுதல் தேவை என்பதையும் என்னால் தைரியமாகக் கூறமுடியும். இதற்குரிய கிரயத்தைச் செலுத்தாமல் இதைப் பெற்றுக்கொள்ள முடியாதென்பதில் ஐயமில்லை.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு இம்மானுவேல் ஞானராஜ் - விஷ்வவாணி, இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு

# யாருக்காய் வாழ்கிறாய் நீ?

பிறந்துவிட்டோம், வாழ்ந்துதானே ஆகவேண்டுமென்று சலிப்போடும், வாழ்க்கை பளுவாகத் தோன்றுவதால் வருத்தத்தோடும், வாழும் ஜனங்களைப் பார்க்கின்றோம். அன்றாட வேலையில் அவசர அவசரமாக ஓடினாலும், எதற்காக இந்த கடின உழைப்பு என்பதை அறியாமல் வாழ்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவசரமான ஓர் உலகில் காலை முதல் மாலை வரை பொழுது போகவில்லையே என ஏங்குவோரும் உண்டு! வாழ்வில் நோக்கமின்றி வாழுவோர் ஒருபுறம், ஏதாவது ஒன்றை சாதித்தே தீரவேண்டுமென்று வாழுவோரும் மறுபுறம்! ஒவ்வொரு மனிதனுக்கும் பல நாட்கள் வாழவேண்டுமென்ற விருப்பம் வருகின்றது. அது சஞ்சலம் நிறைந்ததாகவே முடிகின்றது!

"என் பிதாக்களின் ஆயுசு நாட்களுக்கு என் வயது எட்டவில்லை" என்று பார்வோனிடம் கூறிய யாக்கோபு, என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுமுள்ளதாயிருக்கிறது என்றார். (ஆதி 47:9).

வாழ்க்கையில் திடீர் இழப்பு, வியாதியை சந்தித்த போது "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" என்று யோபு தன் ஜெபத்தில் கூறுகிறார். (யோபு 14:1).

குழந்தை பாக்கியமில்லாத அன்னாளுடைய வாழ்க்கையிலும் சஞ்சலமே (1சாமு 1:8). ஆயுசு நாட்களைக் குறிப்பிடும் மோசே, "அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே" என்றே எழுதுகிறார் (சங்கீதம் 90:10). அதுமட்டுமல்ல, மனவிருப்பத்தின்படியெல்லாம் வாழ்ந்து பார்த்த சாலொமோன் ஞானி வாழ்க்கை சஞ்சலம் நிறைந்தது என்று கூறுவது பிரசங்கி புத்தகத்தில் 10 தடவை இடம்பெறுகின்றது.

இம்மைக்குரியவைகளுக்காக வாழுவோருக்கும், நோக்கமில்லாமல் வாழ்வோருக்கும் இந்த வாழ்க்கை சஞ்சலமே! ஆனால், நல்லதொரு விளைவு முடிவினைப் பெறுவதற்காக வாழ்வில் துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டங்களை கடந்துசெல்ல நேர்ந்தாலும் அந்த வேதனை அவர்களுக்கு சஞ்சலத்தையல்ல, ஒரு சந்தோஷத்தையே கொடுக்கும்! ஆகையால் வாழ்வின் சந்தோஷம் என்பது வாழ்வின் நோக்கத்தை சார்ந்ததாகும். உலகத்திற்காக, பாவத்திற்காக வாழுவோர் எத்தனை சந்தோஷம் கண்டாலும் முடிவு வேதனையே! ஆனால் பரமன் இயேசுவுக்காக பரலோக நோக்கத்திற்காக வாழுவோர் எத்தனை இடர், இன்னல்கள் நேர்ந்தாலும் இன்பமுகத்துடன் இறுதியில் காண்பது மாபெரும் சந்தோஷமே!

வாரினால் அடிக்கப்பட்டு, காயங்களோடு தொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்ட பவுல், சீலாவுக்கு நடு இரவிலும் கீதம் பாடமுடிந்ததே, காரணம், இதயத்தில் நிரம்பிநின்ற சந்தோஷம்தான். இயேசுவுக்காக வாழ்ந்து, பாடுகள் பட்டதினால்தான்! சீஷர்கள் இயேசுவின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட படியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டு புறப்பட்டார்கள் என அப்போஸ்தலர் 5:41ல் வாசிக்கிறோம்.

இன்று யாருக்காய் வாழ்கிறாய் நீ? என்ற கேள்விக்கு முன்பாக நிற்கிறோம். உலகோர் வாழுவது உலகத்திற்கு, நரகோர் வாழுவது பாவத்துக்கு, சுயநலவாதிகள் வாழுவது தங்களுக்கு! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசி வாழவேண்டியது இயேசுவுக்காகவே, அவருக்கு ஊழியம்செய்ய அழைக்கப்பட்டோர் வாழ்வது சுவிசேஷ ஊழியத்திற்காகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிகள் ஏன் இயேசுவுக்காக வாழவேண்டும், எப்படி வாழவேண்டும் என்ற இரு கேள்விகளை சிந்தித்தால் நாம் யாருக்காக வாழ்கிறோம் என்பதில் தெளிவுபெற இயலும்.

## பாவத்திற்காக வாழ்பவர்கள்:

உங்கள் வாழ்வு எதற்காக? மரணத்தைத்தரும் பாவத்திற்காகவா? அல்லது நீதியைக் கொண்டு வரும் கீழ்ப்படிதலுக்காகவா? பவுல் இதுகுறித்து கூறுவதை வாசியுங்கள்: "எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள்"(ரோம 6:16). "சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களில் பாவம் ஆளாதிருப்பதாக"(ரோம 6:12). பாவத்திற்குக் கீழ்ப்படிய சரீரத்தை ஒப்புக்கொடுத்தால் அதற்கு நாம் அடிமைகளே, நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சைகளின்படி நடந்து, நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபே 2:3). மாம்ச இச்சைகள் வெளியரங்கமாயிருக்கும்(கலா 5:19-21). அதை நிறைவேற்ற வாழும் கோபாக்கினையின் பிள்ளைகள் மேல் தேவ கோபம் வந்திருக்கின்றது என்று கலாத்தியருக்கு மாம்ச இச்சையின் முடிவைக்குறித்துக்கூறும் பவுல் "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" எனவும் கூறுகிறார். ஆம், பிரியமானவர்களே, மாம்ச இச்சைகளுக்காகத் தங்கள் வாழ்நாளை செலவிடுபவர் பரலோகம் செல்லலாம் என்பது பகற்கனவே!

பேதுரு கூறுவதையும் கவனியுங்கள்: (2பேதுரு 2: 10-20). அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி வாழ்பவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும், இலச்சைகளுமாயிருந்து, தங்கள் வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள், விபச்சார மயக்கத்தால் நிறைந்தவர்கள், பாவத்தை விட்டோயாத கண்களையுடையவர்கள், புதிய விசுவாசிகளையும் தந்திரமாய் பிடிப்பவர்கள்! இவர்கள் தங்கள் பாவக் கறைகளையே ஆதாயமாக்கப் பார்க்கும் பொருளாசைக்காரர்! இப்படிப்பட்டவர்கள் தண்டனைக்குத் தப்பிக் கொள்வதில்லை! என்னதான் உல்லாசம், ஆனந்தம் என்று கூறினாலும் அவர்களுக்கு மிஞ்சுவதோ சலிப்பும், சஞ்சலமும் தவிப்பும் விரக்தியும் நியாயதீர்ப்பைக் குறித்த பயமுமே!

ஏசாவைப்போல் வயிற்றுக்காக வாழ்பவர் பலர் உண்டு. ஒருவேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரப் பாகத்தை விற்று புசித்து, குடித்து, எழுந்திருந்து போய்விட்டவன் ஏசா (ஆதி 25:34). "ஏசாவையோ நான் வெறுத்தேன்" (மல் 1:3) என்று தேவன் வெறுப்பதற்கான காரணத்தை எபிரெயர் புத்தகத்தை எழுதியோன் கூறுவதை வாசித்திருப்பீர்கள். ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:16). ஊழியத்தைப் பிழைப்பின் மார்க்கமாய் கொள்பவர்களைக் குறித்த எச்சரிக்கையும் தேவை என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு தெரிவித்தார். "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை, அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலி 3:19). பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறவர்களுக்குப் பரலோக ராஜ்யத்தில் பங்கில்லை என்பதால் இன்றே பரிசுத்தமாகுதலுக்கு அழைக்கப்படுகின்றோம்!

## இயேசுவுக்காக வாழ்பவர்கள்:

கர்த்தராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள், சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே என்றே வாழுவார்கள். இயேசுவுக்காக எதையும் கொடுக்கவும் செய்யவும்

நன்றி: ஜாமக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தமாகிவிடுவார்கள்! அப்படியானால், "ஏன் இயேசுவுக்காக வாழவேண்டும்? இந்தக் கேள்விக்குப் பவுல் கூறும் பதிலைப் பாருங்கள். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் (2கொரி 5:15).

நான் இயேசுவுக்காகத்தான் வாழவேண்டும். ஏனெனில் அவர் என்னில் அன்புகூர்ந்தவர் (யோவான் 3:16). இயேசு எனக்காய் மரித்தவர் (ரோமர் 4:25,5:8, 1பேதுரு 2:24). இயேசு எனக்கு நித்திய ஜீவன் தந்தவர் (யோவான் 1:12,2 கொரி 5:17). ஆக்கினை தீர்ப்பில்லை என்றாக்கினவர்(யோவான் 5:24, ரோம 8:1,33) எனக்காக அபராதம் செலுத்தினவர் (ரோமர் 3:26, 1யோவான் 2:2). அவர் என்னை நீதிமானாக்கிவர் (ரோம 3:24). எனக்கு ஜீவனும் உயிர்த்தெழுதலுமானவர் (யோவான் 11:25). அவர் எனக்காக ஓர் இராஜ்யத்தை ஆயத்தம்பண்ணுகிறவர் (யோவான் 14:2). அவர் என்னை அழைத்துச்செல்ல மீண்டும் வரப்போகிறவர்(யோவான் 14:3, கொலோ 1:4). இத்தனையும் இயேசுதாமே எனக்கு செய்திருக்கும் போது நான் ஏன் அவருக்காக வாழக்கூடாது?

## எப்படி இயேசுவுக்காக வாழவேண்டும்?

முதலாவது, முழு இருதயத்தோடும் அவரில் அன்புகூரவேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும் அன்புகூருவாயாக" (மத்தேயு 22:37) என்பதே நியாயப் பிரமாணத்தைக் குறித்த இயேசுவின் முதலாம் பிரதான கற்பனை. நாம் இயேசுவில் அன்பாயிருந்தால் அவரது கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம் (யோவான் 14:15) என்பது அவரது எதிர்ப்பார்ப்பு. இரண்டாவதாக, சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றி வாழவேண்டும். ஏனெனில் "தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல" என்று இயேசுதாமே கூறுகிறாரே (மத் 10:38). எனக்காய் மரித்தவருக்காக நான் மரிக்கவும் ஆயத்தம் என்ற தீர்மானம் நமதாக வேண்டும்.

## ஊழியர்கள் வாழ்வது சுவிசேஷத்திற்காக!

விசுவாசி என்பவர்கள் தேவ பிள்ளைகளே! அதாவது, இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனை

**நான் இயேசுவுக்காகத்தான் வாழவேண்டும். ஏனெனில் அவர் என்னில் அன்புகூர்ந்தார்!**

பேர்களும் தேவனுடைய பிள்ளைகளே (யோவான் 1:12) மறுபடியும் பிறந்தவர்கள், ஆம். தேவபிள்ளையென்பது பிறப்பு சார்ந்தது! ஆனால் ஊழியர் என்பது பிறப்பு பற்றி அல்ல, பிழைப்பு சார்ந்ததும் அல்ல, அது அழைப்பு சார்ந்தது!

பிரியமான தேவ ஊழியரே, நீர் அழைக்கப்பட்டவரா? தேவன் என்னை தெரிந்துக்கொண்டு அழைத்தார் என்ற தெளிவும், யாருக்கு? எதற்காக ஊழியம் செய்கிறோம், என் எஜமான் யார்? என்ற உறுதியும் உண்டா? என்ற கேள்விகளை அனைத்து ஊழியர்களும் கேட்டுப் பார்க்கவேண்டும். அது கர்த்தராகிய இயேசுவின் ஊழிய அழைப்பு என்றால் இயேசுவின் ஊழியம் என்ன? "மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய்" (மத்தேயு 21:28) என்ற உவமையை கூர்ந்து கவனியுங்கள். வேலையாட்களை மறுபடியும் மறுபடியும் அழைத்துவரும் அவரது பணி (மத்தேயு 20) எத்தனை முக்கியமானது! அந்த வேலையானது, "என் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:18) என்பதே. அவர் கட்ட வந்ததும், இறுதியாகக் கட்டளையிட்டுச் சொன்னதும் சுவிசேஷ ஊழியம்தானே! அதில் எனக்குப் பங்கு உண்டா என்பதே ஊழியருக்குமுன் வைக்கப்படும் முதற்கேள்வி!

எவ்வித ஊழியத்தில் ஈடுபட்டாலும் சரி, அது சுவிசேஷ ஊழியத்தை மையமாகக்கொள்ளா விடில் பயனற்றதே! 1நாளா 4:25ல் ஓர் சிறந்த குறிப்பு உண்டு. "இவர்கள் குயவராயிருந்து, ராஜாவின் வேலையை விசாரிக்கிறதற்கு அங்கே வாசம்பண்ணினார்கள்." பொறுப்பு அல்லது தொழில் எதுவாயினும் ராஜாவின் வேலையில் இருக்கிறோமா? வயிற்றுக்காக, உலகத்திற்காக, சுயபெருமைக்காக ஊழியம் செய்தோர் கண்டது வறுமையும், வெறுமையுமே! சுவிசேஷத்தை குறிக்கோளாக்கி ஊழியம் செய்வோரே வாருங்கள், சிலுவைக் கொடியேந்தி முன்செல்வோம், வாருங்கள்! நம்மூலமாக இயேசு கிறிஸ்துவானவர் தம்முடைய திருச்சபையைக் கட்டுவதற்கு அணியணியாய் முன்வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி

## இரட்சிக்கப்பட்டிருக்கின்றேன் என்பதை ஒருவர் அறிய முடியுமா?

# பதில்

ஆம் இரட்சிப்பு, இன்றைய அனுபவமும் நாளைய நம்பிக்கையுமாகும். அப்போஸ்தலனாகிய யோவான் இப்படி எழுதுகின்றான். "நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம். நாம் தேவனால் உண்டாயிருக்கின்றோமென்று அறிந்திருக்கின்றோம். (1யோவான் 3:14-5:19).

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளும்போது தேவனது பிள்ளையாகும் உரிமை பெறுகிறீர்கள் (யோவான் 1:12) இரட்சிக்கப்படுகிறீர்கள் (அப்.16:31). உங்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுகிறீர்கள் (வெளி.1:6). இந்தவிதமான நிச்சயத்தை உங்களுக்குத் தருபவர் பரிசுத்த ஆவியானவர். நீங்கள் தேவனுடைய பிள்ளையென அவர் உங்கள் ஆவியுடன் சாட்சி கொடுக்கின்றார் (ரோமர் 8:16). இதற்கு பிரதானமாக எழுதப்பட்ட தேவ வார்த்தையை அவர் பயன்படுத்துகின்றார் (யோவான் 20:31).




நீங்கள் இரட்சிக்கப்படும்போது தெளிவான சில அடையாளங்கள் தோன்றும். குற்ற உணர்வு அகன்று இரட்சிப்பின் மகிழ்ச்சியுண்டாகும். தேவன் மீதும் அவரது வார்த்தை மீதும் புதியதோர் நேசம் பிறக்கும். ஜெபம் இன்பமாகும். பரிசுத்தமாய் வாழ விருப்புண்டாகும். வாழ்க்கையின் நோக்கே மாறிவிடும். தேவ பிள்ளைகளோடுள்ள ஐக்கியம் இனிதாகும். பிறரது இரட்சிப்பைக் குறித்த கரிசனை உண்டாகும். இவையாவும் முழு அளவில் காணப்படாது. ஆனால் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளாய் இவைகளில் நீங்கள் வளரத் தொடங்குவீர்கள்.

இரட்சிப்பு முக்காலத்திற்குமுரியது. கடந்த கால இரட்சிப்பு பாவத்தின் தண்டனையிலிருந்தும், நிகழ்கால இரட்சிப்பு பாவத்தின் வல்லமையிலிருந்தும் கிடைக்கும் விடுதலையாகும். எதிர்கால இரட்சிப்பு பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே கிடைக்கும் விடுதலையாகும். நிகழ்கால இரட்சிப்பின் அனுபவத்தில் சோதனையில்லாமல் இருக்காது. ஆகவே, சோதனை பெருகுவதைக் கண்டு கலங்கிவிடாதீர்கள். உங்களுக்கு ஏற்படும் சோதனையல்ல, அதற்கு இடங்கொடுப்பதுதான் பாவம்.

பிசாசு ஒரு பொய்யன். அவனுக்குச் செவிமடுக்காதீர்கள். ஏதோ ஒரு சோதனையில் நீங்கள் விழுந்துவிட்டால், இனி நீங்கள் தேவபிள்ளையில்லை என்று உங்கள் காதில் ஓதுவான். சோதனையில் விழுந்தால் தேவ பிள்ளை என்ற நிலையை நீங்கள் இழந்துவிடுவதில்லை. தேவனோடுள்ள ஐக்கியம்தான் பாதிக்கப்படுகின்றது. எனவே பாவத்தை அறிக்கையிட்டு உடனே கழுவப்படுங்கள் (1யோவான் 1:7-9). நீங்கள் அவர் கையில் பாதுகாப்பாய் இருப்பீர்கள். ஒருவரும் உங்களை பறித்துக்கொண்டுபோக முடியாது (யோவான் 10:28,29).

ஆர்.ஸ்டான்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசுத்த உறவு பரிகசிக்கப்படலாமா!

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். (எபிரெயர் 13:4)

"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி.2:24) ஒரு ஆணையும் பெண்ணையும் புருஷன் மனைவியாக இணைத்து, அவர்களுக்குள்ளான சம்மந்த உறவுக்கு தேவாதி தேவன் ஏற்படுத்திய பந்தம் இதுதான். "...நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, ...ஆண்டுகொள்ளுங்கள்" (ஆதி.1:28). பரிசுத்த விவாக பந்தத்தில் இணைக்கப்பட்ட தம்பதியினருக்கு தேவன் அருளிய ஆசி இதுதான். "பாலியலுறவு" என்பது திருமணத்தில் இணைகின்ற ஒரு தம்பதியினருக்கு கர்த்தர் அருளிய ஒரு பரிசுத்த ஈவு. அந்த உறவில், கணவன் மனைவி மாத்திரமல்ல, அந்த உறவுக்கூடாக தமக்கும் தமது பிள்ளைகளுக்குமுள்ள உறவையும் அடையாளப்படுத்தி, தம் பிள்ளைகளுடனான அன்பின் உறவில் தேவனும் மகிழுகிறவராய் இருக்கிறார். அவரது மகிழ்ச்சிக்கு, பரிசுத்த நோக்கத்திற்கு நாம் பங்கம் விளைவிக்கலாமா?

## திருமண பந்தமும் பாலியலுறவும்:

உண்மைதான், மனித இனப்பெருக்கத்திற்கு "பாலியலுறவு" (sexual relationship) மிகவும் அவசியம்; ஆனால், இந்த உறவு இனவிருத்திக்காக மாத்திரம்தான் ஏற்படுத்தப்பட்டது என்று இல்லை. அப்படியானால் அதை மனம்போனபடி அனுபவிக்கலாமா? இந்த உறவு பரிசுத்தமாய் காக்கப்படுவதற்கு 'திருமணம்' என்றதொரு பந்தத்தை தேவன், இதற்கென்றே வேறுபடுத்திவைத்துள்ளார். அடுத்தது, சந்ததிவிருத்திக்காக மட்டுமே என்று ஒரு எல்லைக்கோட்டுக்குள்ளும் இந்த உறவு மட்டுப்படுத்தப்பட்டதுமல்ல; உணர்வுபூர்வமான, உறவுபூர்வமான, ஆவிக்குரியதான நெருக்கத்தை ஒருவரோடொருவர் இணைந்து அனுபவிக்கும் தம்பதியினர், தங்களது அந்த ஆத்மார்த்தமான அன்பை 'பாலியல் நெருக்கத்தின்' (Sexual Intimacy) ஊடாக கொண்டாடுகின்றனர் என்பதுதான் இந்தப் பரிசுத்த உறவின் தாற்பரியம். ஆக, ஆத்மார்த்தமான உறவின் வெளிப்பாடாகவே இந்த பாலியலுறவு கொண்டாடப்பட வேண்டும். இந்தவகையில் திருமணபந்தத்திற்கு வெளியேயோ, கட்டாயத்தின் பேரிலேயோ, இச்சைக்குட்பட்டோ, வெறுப்புடனோ இந்த உறவுக்குட்பட்டு, தேவன் கொடுத்த ஈவை எந்வொரு மனிதனாவது கொச்சைப்படுத்துவது அசிங்கமானது. அது தேவனுடைய பரிசுத்த நோக்கை, பரிசுத்த ஒழுங்கைக் கொச்சைப்படுத்துவது போலாகும்.

இந்த அன்பின் பந்தத்தைக் குறித்து எழுதப்பட்ட ஞானவார்த்தைகளை பரிசுத்த வேதாகமத்திலேயே கர்த்தர் சேர்த்து தந்துள்ளார். நீதிமொழிகள் 5:15-20 வரையிலும் வாசித்து பாருங்கள். (வசனம் 16ல் "பாய்வதாக" என்ற சொல்லை "பாய்வதென்ன" என்று படியுங்கள். சிறிய மொழிபெயர்ப்பு தவறு. 'உன் ஊற்றுநீர் வெளியே பாயவேண்டுமா? உன் வாய்க்காலின் நீர் வீதியிலே வழிந்தோடவேண்டுமா? அவை உனக்கே உரியதாகட்டும்." (திருவிவிலிய மொழிபெயர்ப்பு) திருமண பந்தத்திற்கு வெளியே அனுபவிக்கும் அல்லது அனுபவிக்க துடிக்கின்ற பாலியலுறவானது, தேவன் அமைத்துக்கொடுத்த பரிசுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பாலியல் நெருக்கத்தின் அழகைக்குலைத்து நமது சந்தோஷத்தையும் நிச்சயம் கெடுத்துப்போடும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயல்பாகவே இருக்கிறது இந்தப் பாலியல் உணர்வு; இது பாவமல்ல. ஆனால், இது தவறாக அனுபவிக்கப்படும்போது அதுவே மனிதனுக்கு தீங்காக மாறுகிறது. வேட்கையைத் தணிக்கவோ, உணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ளவோ ஏற்படுத்தப் பட்டதல்ல பாலியலுறவு என்பதை ஒவ்வொரு மனிதனும் (பெண்ணும், ஆணும்) புரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு தம்பதியனர்தான் என்றாலும், அவர்களுக்குள் எழும் தொடுகையின் மகிழ்ச்சிக்கும் மேலாக ஒரு பாலியல் நெருக்கத்தை தேவன் வடிவமைத்துள்ளார். இந்நெருக்கத்தில் வெறும் சரீரம் மாத்திரமல்ல, சரீரம், ஆத்துமா, மனது, ஆவி சகலமும் ஒன்றிணைந்த நெருக்கத்தின் ஐக்கியத்தில் ஒரு கணவன் மனைவிக்கிடையில் பகிர்ந்துகொள்ளப்படுகின்ற விதத்திலேயே தேவன் இதை வடிவமைத்துள்ளார். ஒளிவு மறைவற்ற, திறந்த மனதுள்ள, வெட்கமற்ற ஒரு நிலையிலேயே ஒவ்வொருவரும் தம் துணைக்கு முன்னே நிற்கிறார்கள். அங்கே ஒரு பரிசுத்த அன்பு, நெருக்கம், பாசம் ஒருவரையொருவர் அருகே இழுத்துக்கொள்கிறது. ஒருவரது இதயம் தன் துணையின் இருதயத்துடன் ஒன்றிணைகிறது. அது எத்தனை அழகான பிணைப்பு. பிறர் அந்த அழகைக் கெடுக்கலாமா!

அடுத்தது, பாலியல் உறவானது படுக்கையறை இன்பத்துக்காக, அதாவது சரீர தாகத்தைத் தீர்ப்பது சம்மந்தமானவிடயத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது ஒரு அன்பின் பிணைப்பு. தெய்வீக திருமண பந்தத்தின் அன்பின் வெளிப்பாடு. பாலியல் உணர்வைத் தீர்ப்பதற்காக திருமணபந்தம் ஏற்படுத்தப் பட்டதுமல்ல. பாலியல் நெருக்கம் என்பது மணவாழ்வில் ஒரு பகுதி தான். இந்த உறவானது, மனிதன் தேவ சாயலில் ஆணும் பெண்ணுமாகப் படைக்கப்பட்டவன் என்பதை வெளிப்படுத்துகின்ற ஒரு காரணி.

கணவன் மனைவிக்கிடையிலான இப்பரிசுத்த உறவை வேறு கண்கள் காணவே கூடாது. ஆனால், சகலத்தையும் காண்கின்ற தேவனுக்கு இதனை மறைக்கவும் முடியாது. அவர் சகலத்தையும் காண்கிறவர், அறிந்திருக்கிறவர். தாம் ஈவாக கொடுத்த இந்த அன்பின் உறவை ஒரு கணவன் மனைவி மகிழ்ச்சியோடு அனுபவிக்கும்போது, அதை கொடுத்த தேவன் மகிழ்ந்து புன்முறுவல் பூக்கமாட்டாரா!

### கிறிஸ்துவுடனான நெருக்கமான உறவின் பிரதிபலிப்பு:

பாலியல் உறவின் பரிசுத்த நெருக்கத்தைக் குறித்தும், இதன் தார்ப்பரியத்தைக் குறித்தும் பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதிய 5:21-33 பகுதியில் வாசித்து அறியலாம். இப்பகுதியில், கிறிஸ்துவுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் இடையிலான அழகான நெருக்கமான ஐக்கிய உறவை, தாம்பத்திய உறவினை பவுல் நேர்த்தியாக ஒப்பிட்டு விளங்க வைத்துள்ளார். இரண்டுமே ஒன்றையொன்று சார்ந்தது. திருமண உறவு, கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவுக்கு ஒரு வெளிப்படையான சாட்சியாக இருக்கிறது என்றால், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள உறவானது தாம்பத்திய உறவுக்கு மாதிரியாக அமைகிறது. தமக்கென்று தெரிந்து கொண்ட இஸ்ரவேல் எப்போதெல்லாம் தம்மைவிட்டு அந்நிய தேவர்களை நாடினார்களோ, அந்நியருடன் உறவுவைத்துக் கொண்டார்களோ அப்போதெல்லாம் அதை விபச்சார பாவமாகக் குறிப்பிட்டு கர்த்தர் தீர்க்கர்மூலமாகக் கடிந்து கொண்டதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

தேவன் தம் பிள்ளைகள் தம்முடன் உறவாயிருப்பதையே விரும்புகிறவர். மனித வாழ்வில் விவாகமஞ்சம் அசுசிப்படுவதே பெரிய கேடு என்றால், தேவனுடனான உறவை அசுசிப்படுத்துவது எப்பெரிய கேடு! எப்படியாக ஒரு கணவன் மனைவி, சகலத்திலும் அன்பின் உறவுக்குள் பயமின்றி ஒளிவுமறைவின்றி வெட்கமின்றி ஒன்றாகிறார்களோ, அவ்விதமாகவே ஆவி ஆத்துமா சரீரத்தில் தேவன் நம்மையும் தமக்குள் சேர்த்துக்கொள்கிறார். நம் ஆவியோடும் நம் ஆத்துமாவோடும் முழுமையாக தம்மை ஆராதிக்க அழைக்கிறார் தேவன். நமது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும்படி கேட்கிறார். அப்படி நாமும் அர்ப்பணிக்கும்



**- சாந்தி பொன்னு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, இயேசு கிறிஸ்து நம்மில் கொண்டுள்ள அன்பை நாமும் ஆழமாக ரசிக்கலாம், அனுபவிக்கலாம்.

திருமண பந்தத்திற்குள்ளான பாலியல் நெருக்கத்தை அனுபவிக்கும் அனுபவமானது, தமது மகிமைக்கென பாலியல் உறவை ஆரம்பித்து அருளிய தேவனை ஆராதிக்கும் ஆராதனைக்குள் நம்மை இழுக்கின்ற கருவியாயிருக்கிறது. இவைகளை வெளிப்படுத்துமுகமாகவே, ஒரு கணவன் மனைவி உறவின் நெருக்கத்தையும், கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள நெருக்கமான உறவையும் ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு எழுதிவிட்டு, “இந்த இரகசியம் பெரியது” என்று எழுதி முடித்தார் பவுல்.

### இன்றைய சீர்கேடு:

ஆனால், இன்று நடப்பது என்ன? தினமும் கேள்விப்படும் செய்திகள் நமக்கு வெறும் செய்திகள்தானா கேட்டுவிட்டுக் கடந்துபோக? ஒரு பெண் பலபேரால் வன்புணரப்பட்டு நாராய் கிழிக்கப்பட்டுத் தூக்கியெறியப்படுவதும், ஓடும் ரயிலில், பேருந்தில் கொடுமை அரங்கேறுவதும், 5,6 வயது பெண்குழந்தைகள், போதாதென்று ஆண்குழந்தைகளே காமுகர்களின் கைகளில் மொட்டிலேயே சிதைந்து அழிந்துபோவதும் 14,15 வயது சிறுமிகள் 50, 60 வயதினரால் கர்ப்பமாவதும், 14,15 ஆண்பிள்ளைகள் 3,4 வயது பெண் குழந்தைகளில் சேட்டை விடுவதும் வெறும் செய்திகள்தானா? சிந்திக்க வேண்டிய கொடுமைகள்! இது ஒருபுறம் என்றால், பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து கண்மணியைப்போல பாதுகாத்து வளர்த்து, இளவயதில் ஆதரித்து, ஒருவனிடம் கைப்பிடித்து கொடுக்கும்வரைக்கும் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கும் பெற்றோரையே கொல்லுவதற்கு அந்த மகளே திட்டமிட்டுக் கொடுப்பதும், ஒரு பெண்ணின் பேச்சுக்கு இணங்கி ஓரினச்சேர்க்கையில் விழுந்து, பெற்றோர் கொல்லப்படக் காரணமாவதும் சாதாரண காரியங்களா, ஐயோ, சொல்லிவிட்டுக் கடந்துபோக? அப்பா மகளைக் கெடுப்பதும், அண்ணா தங்கையைச் சீரழிப்பதும் ஏன்? இது மோகமா? காமமா? வேட்கையா? வேசித்தனமா? அல்லது விபசாரமா? அல்லது எல்லாமே ஒன்றிணைந்து மனிதனை அழிக்க வந்த அரக்கத்தனமா?

விபச்சார பாவம் இன்று கொலை செய்யுமளவுக்கு, அதிலும் பெற்றெடுத்த பெற்றோரையே கொன்றுபோடுமளவுக்கு இளம் சமுதாயத்தினரையே ஆட்டிப்படைக்கிறதென்றால், நமது வீட்டுக்கதவு தட்டப்படும்வரைக்கும் நாம் ஏனோதானோவென்று இருப்பது சரியா?

கேட்டால், இது சாத்தான் செயல், மூளைக்கோளாறு என்று சாட்டு வேறு. வெளிநாடுகளில் Dating என்ற பெயரில் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒரு நாளை தனிமையிலே கொண்டாடும் பழக்கம் சர்வ சாதாரணமாகிவிட்டது நாம் அறிந்த உண்மை. அதிலும் மாணவர்கள், வாலிபர்கள், என்று திருமணமாகாதவர்களுக்கே இக் கொண்டாட்டம். வெளிநாடொன்றில், பாடசாலையில் ஆசிரியர்கள் இளைப்பாறும் அறையிலே, வழிதவறி பாலுறவுகொள்ளும் மாணவ மாணவிகளைக் குறித்து ஒரு கலந்துரையாடல் நிகழ்ந்ததாம். அதில் பல ஆசிரியர் கூறிய முடிவு என்ன தெரியுமா? பருவமாற்றத்திலே ஏற்படும் பாலியல் தூண்டுதலை கட்டுப்படுத்த முடியாவிட்டால், பங்கம் நேரிடாமல் அதை அனுபவித்துவிட்டால் அது தணிந்துபோகும். ஆக மாணவர்கள் பாதுகாப்பாக பாலியலுறவை அனுபவிக்க நாம் உதவவேண்டும் என்பதே. இதைக் கேட்டுக் கொண்டிருந்த நமது நாட்டைச் சேர்ந்த ஒரு ஆசிரியை இடிந்துபோய் இத் தகவலைத் தெரிவித்தார்கள்.

அதுமாத்திரமா, திருமணபந்தத்தில் இணைய முன்பதாக ஒன்றாக வாழ்ந்து ஜீவிப்பது. அதாவது முன்னோடியாய் ஒத்திகை பார்ப்பது எல்லாமே இன்று நாகரீகமாகிவிட்டது. மாத்திரமா, திருமணமாகி பிள்ளைகளையும் பெற்றபின்பு தவறான உறவுகளை வளர்த்து, அதன் எதிரொலியாக கைபிடித்த மனைவியையும், ஆசையாய் பெற்றெடுத்த பச்சைப் பாலகன்களையும் வெட்டிக்கொன்று குவிக்குமளவுக்கு இவ் விபசார வேட்கையை என்ன சொல்ல!

### வேதாகம நபர்களும் பாலியல் பிரச்சனையும்:

இன்றுமட்டுமா, வேதாகமத்திலேயே இப்படிப்பட்ட சம்பவங்கள் பதிவாகி உள்ளதே என்று சாட்டுச்சொல்கிறவர்களும் இல்லாமல் இல்லை. மனுஷ சரித்திரத்திலே இது ஒன்றும் புதினமல்ல என்பது உண்மைதான். அபிமலேக்கு ராஜா, யூதா, தீனாளைக் கெடுத்த சீகேம், தாவீது, அம்னோன் என்று பெரிய பெயர் பட்டியலை வேதாகமம் பகிரங்கப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியுள்ளது. விவாகம், விவாக மஞ்சத்தைக் குறித்து பவுல் எழுதிய நிருப வாக்கியங்களிலிருந்து, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் விபசாரம் மனிதனை, கிறிஸ்தவ விசுவாசிகளையே ஆட்டிப்படைத்திருப்பது தெளிவு. ஆனால், இன்றோ விபசார பாவம், பாலியல் கொடுமைகள் மிகக் கொடிகட்டிப் பறப்பது என்ன? கிறிஸ்தவ விசுவாசிகளும் இந்த கொடிய வலைக்கு விதிவிலக்கு அல்ல என்பதை மறுக்கமுடியாது.


ஆம், பாவம் புதிதல்ல என்பது உண்மைதான்; ஆனால், பாவத்தை குறித்த பயஉணர்வுதான் இன்று மாற்றமடைந்துவிட்டது. அன்று தன் தவறை உணர்ந்த யூதா அதன்பின் தாமாரை அணுகவில்லை. இச்சை, மோகம், விபசாரம், தந்திரம், கொலை என்று ஒரு பெண்ணை அடைவதற்கு தொடர்பாவத்துக்குட்பட்ட தாவீதுகூட, தன் பாவம் உணர்த்தப்பட்டபோது கதறினான். அழுதான். ஆனால் இன்று, இது பாவமா? இதிலென்ன இருக்கிறது? இது தவறல்ல? பிள்ளை விரும்பிய படியே வாழவிடவேண்டும் என்று பாவத்திற்குப் பரிந்துபேசும் பட்டம் பெறாத நவீன வக்கீல்கள் நிறைந்த ஒரு சமுதாயம் உருவாகிவிட்டிருப்பதை நாம் மறுக்கமுடியாது. இன்டர்நெற் காதல், இன்டர்நெற் திருமண ஒப்பந்தங்கள், பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமென கூறி தப்பிக்கொள்ள முயலும் பெற்றோர்கள், பாலியலை தூண்டிவிடும் சினிமா, காதலுக்கே டொட்கொம் அமைத்துக்கொடுக்கும் ஊடகங்கள் என்று எல்லாமே சேர்ந்து மனிதன் தப்பிக்கொள்ளவே முடியாதளவுக்கு அவனைச் சிறைப்பிடித்துவிட்டன. சரி எது பிழை எது என்று பகுத்தறிவை விட்டு, தனக்கு விருப்பம் எது விருப்பமில்லாதது எது என்பதைத் தெரிந்தெடுப்பதிலே தான் இன்று மனுக்குலம் பட்டம் பெற்றிருக்கிறது.

### கிறிஸ்தவனே! சிந்திப்பாயா!

ஆனால், கிறிஸ்தவனே! நீ சாட்டுப் போக்குச் சொல்ல முடியாது. அன்றைய வேதாகம நபர்களை நீ சாட்டுச்சொல்ல முடியாது. இன்று உனக்கு கிறிஸ்துவின் இரத்தம் உண்டு. உனக்காகத் தம்மையே பலியாகக் கொடுத்த ஆண்டவர் இருக்கிறார். பலவீனங்கள் யாருக்கு இல்லை. மாம்சத்தோடு நமக்கு கடைசி வரை போராட்டம் உண்டு என்று தேவனே எச்சரித்துள்ளார். ஆனால், அதனை மேற்கொண்டு வெற்றிபெற கர்த்தர் சகலத்தையும் நமக்காகச் செய்து முடித்துவிட்டார் அல்லவா! இனியும் நமக்கு என்னத் தான் வேண்டும். இன்று கிறிஸ்தவ குடும்பங்களுக்குள்ளும், திருச்சபைகளுக்குள்ளும், தேவன் அருளிய பரிசுத்த உறவானது இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ அசுசிப்படுவதை மறுக்கமுடியுமா? அறிவை வளர்த்து என்ன பயன்? படித்துப் பட்டம் பெற்று என்ன பயன்? தேவனுக்குப் பிரியமாய் வாழவேண்டுமானால், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப் படிவதைத்தவிர வேறுவழி இல்லை. 'பாலியல்' என்ற பரிசுத்த உணர்வு நம்மில் பலவீனப்பட விடக்கூடாது. சோதனை வரும்; தவறான ஆசை எழும். தப்பான நினைவுகள் நம்மை அலைக்கழிக்கும். இதை வெளியே சொல்லவும் மெல்லவும் முடியாது. ஆனால், நமது செய்கைகளை நெடுநாட்கள் மறைக்க முடியாதே. தாவீது இரு ஆண்டுகளாக உணர்வற்றுத்தான் கிடந்தார். ஆனால், காரியம் வெளிப்பட்டவுடன் நடந்தது என்ன? மனதில் சலனம் தோன்றும் போதே ஓடிச்சென்று தேவபாதத்தில் விழுந்து கதறிப்பாருங்கள். கர்த்தர் காரியங்களை மாற்றிப்போடுவார். இந்தக் கொடிய அரக்கனிடமிருந்து நிச்சயம் விடுதலை தந்தே தீருவார். ஆனால், "நான் விடுவிக்கப்பட வேண்டுமே" என்ற வாஞ்சை நமக்குள் இல்லையானால் கர்த்தர் எப்படி நமக்கு உதவிசெய்ய முடியும்? இக் கொடிய பாவத்தின் தன்மையே அதுதான்; முதலில் நாம் அதைப் பிடிப்போம், பின்னர் அது நம்மைப் பிடித்துவிடும். நாம் விரும்பினாலும் அது விடாது. ஆனால், அதிலிருந்து நம்மை விடுவிக்க ஆண்டவரால் முடியும்.

கிறிஸ்தவ விசுவாசியே! நமக்குப் பெரிய பொறுப்பு உண்டு. நமது சொந்த வாழ்வு, குடும்ப உறவை என்பவற்றைக் கட்டிக்காப்பது நமது கட்டாய பொறுப்பு. அத்துடன், இப் பிரச்சனைகளுடன் போராடியபடி நம்மை சுற்றியிருக்கிற தேவனை அறியாத மக்களைக் குறித்த பொறுப்பும் நம்முடையதுதான் என்பதை மறக்கக்கூடாது. தேவ கிருபையால் நாம் இரட்சிக்கப்பட்டதும், கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டதும், போராட்டங்கள் மத்தியில் தேவனுக்குப் பிரியமாய் நாம் வாழ நினைப்பதும் நல்லது. ஆனால், கர்த்தர் அந்தக் கிருபைகளை நமக்கு ஈந்தது, நமக்கூடாக பிறரும் தேவஅன்பை பெற்று, நலமுடன் வாழ்ந்து தம்மண்டை வந்து சேர வேண்டும் என்பதற்காகவே. ஆக, இன்றைய சமகால சூழலிலே கிறிஸ்தவனே, தேவன் அருளிய பரிசுத்தமான பாலியல் உறவானது பரிகசிக்கபடும்படி பல காரியங்கள் நடைபெறுவதை எதிர்த்து நாம் எழும்ப வேண்டாமா! இதற்கு என்ன செய்யலாம் என்பதை சிந்தித்து, தேவபெலத்தோடு, இந்தப் பெரிய போருக்கு முகங்கொடுத்து, நமது மக்களை காப்பாற்ற இன்றே முன்வருவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆற்றைக் கடக்கும் அற்புதம் - 3

# மூன்று நல்ல காரணங்கள்

எம்.எஸ்.வசந்தகுமார்

இஸ்ரவேல் மக்கள் யோசுவாவின் தலைமையில் யோர்தான் நதியைக் கடப்பதற்கு அவசியமான சகல காரியங்களையும் செய்த பின்னர் தேவன் யோசுவாவுடன் பேசத் தொடங்குகிறார். உண்மையில், முதலாம் அதிகாரத்தில் யோர்தானைக் கடந்து போகும்படி தேவன் யோசுவாவுக்கு அறிவுறுத்திய பின்னர் இப்பொழுது இரண்டாவது தடவையாக அவனோடு பேசத் தொடங்குகிறார். யோர்தானைக்கடந்து செல்லும்படி தேவன் கட்டளையிட்ட பின்பு அதற்கு அவசியமான சகல காரியங்களையும் யோசுவா செய்து முடித்ததோடு, "நாளை தேவன் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்" என்று மக்களிடம் கூறி, தேவன் அற்புதங்களைச் செய்வார் என்னும் நம்பிக்கையில் ஆசாரியர்களை புறப்பட்டுப் போகும்படி கட்டளையிட்டிருந்தான். இதனால், யோசுவாவின் வார்த்தைகளை உறுதிப்படுத்தும்விதத்தில் தேவன் அவனோடு பேசுகின்றார். இதைப்போலவே நாமும் தேவன் நம்முடைய வாழ்வில் இடைபடுவார் என்னும் நம்பிக்கையுடன் விசுவாசத்தில் செய்கின்ற காரியங்களையும் பேசுகின்ற வார்த்தைகளையும் தேவன் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நம்முடைய வாழ்வில் செயல்படுகிறவராக இருக்கின்றார். யோசுவாவோடு பேசும் தேவன் தாம் அற்புதங்கள் செய்வதற்கான மூன்று நல்ல காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

**அ தேவன் யோசுவாவுடன் இருப்பதை வெளிப்படுத்துகிறார்** (யோசு 3:7-8)

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்த பூமிக்குள் அழைத்துச் செல்லும் தேவன் தாம் யோசுவாவுடன் இருப்பதை மக்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக அற்புதம் செய்வதாகவும் அதற்கு யோசுவா என்ன செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றார்.

> கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்குமுன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரைப் பார்த்து: நீங்கள் யோர்தான் தண்ணீர் ஓரத்தில் சேரும்போது, யோர்தானில் நில்லுங்கள் என்று நீ கட்டளையிடுவாயாக என்றார் (யோசுவா 3:7-8).

தேவன் செங்கடலின் நடுவில் வழியை உண்டாக்கினபோது அவர் மோசேயோடு இருக்கின்றார் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிந்துகொண்டதுபோல, அவர் யோர்தான் நதியின் நடுவில் வழியை உருவாக்கியபோது தேவன் யோசுவாவோடும் இருக்கின்றார் என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர் (யோசு. 4:14). "நீ போகுமிடமெல்லாம் நான் உன்னோடு கூட இருப்பேன்" என்று யோசுவாவுக்குச் சொன்ன தேவன் இதை மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காக யோசுவாவின் வார்த்தையின்படி, அதாவது யோசுவா ஆசாரியர்களுக்கு கொடுத்த அறிவுறுத்தலைக் கனப்படுத்தும்விதத்தில் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்து செல்வதற்கு அதன் நடுவில் வழியை ஏற்படுத்தினார். இதனால், யோர்தான் நதியில் தேவன் வழியை ஏற்படுத்திய செயல், "மோசேயின் மரணத்தின் பின்னர் தேவன் யோசுவாவை அவர்களுடைய தலைவனாக்கியதை உறுதிப்படுத்தும் செயலாயுள்ளது." மோசேக்குச் சமமான நிலையில் யோசுவா இருப்பதையும் தேவன் இதன் மூலம் காண்பித்துள்ளார். உண்மையில், "யோசுவாவின் செயல்கள் அல்ல, தேவனுடைய செயலே, அதாவது அவர் யோர்தானில் வழியை ஏற்படுத்திய செயலே யோசுவாவினுடைய தலைமைத்துவத்தை இஸ்ரவேல் மக்களுக்கு உறுதிப்படுத்தி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது.” இதைப் பற்றி யோசுவா 4:14ல் “அந்நாளிலே கர்த்தர் யோசுவாவைச் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகவும் மேன்மைப்படுத்தினார். அவர்கள் மோசேக்குப் பயந்திருந்ததுபோல, அவனுக்கும், அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் பயந்திருந்தார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே தற்காலத்திலும் தேவன் தாம் நியமிக்கும் தலைவர்களை மக்கள் ஏற்றுக்கொள்வதற்காகவும், தாம் அவர்களோடு இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்கள் மூலம் செயல்படுகிறவராக இருக்கின்றார். எனினும், தேவன் யோசுவாவைக் கனப்படுத்திய செயல் “அவனை உயர்த்துவதற்காக அல்ல, அவன் மூலமாகத் தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுகிறவராக இருக்கின்றார் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது.”

உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து செல்லும்படி ஆசாரியர்களுக்கு ஏற்கனவே யோசுவா கட்டளையிட்டிருந்ததினால், அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய மேலதிகமான அறிவுறுத்தலையும் தேவன் யோசுவாவிடம் தெரிவிக்கின்றார். மக்களை வழிநடத்தும் விதத்தில் புறப்பட்டுச் செல்லும் அவர்கள் யோர்தான் நதியின் கரையில் நிற்கவேண்டியவர்களாய் இருந்தனர். ஏனென்றால் அவர்களுடைய கால்கள் தண்ணீரில்படும்போது நதியின் தண்ணீர் இரண்டாகப் பிரிந்து அவர்கள் செல்வதற்கான வழியை ஏற்படுத்தியது. இங்கு யோசுவாவின் திட்டத்தை தேவன் திருத்துவதை நாம் பார்க்கின்றோம். அதாவது ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு ஜனங்களுக்கு முன்னேசெல்லும்படியே யோசுவா அறிவுறுத்தியிருந்தான். தேவன் யோசுவாவின் இத்திட்டத்தை அங்கீகரித்தாலும் அதில் சிறுமாற்றத்தை ஏற்படுத்துகிறார். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்லும் ஆசாரியர்கள் யோர்தான் நதியின் ஓரத்தில் தண்ணீர் காலில் படும்விதத்தில் நிற்கும்படி கூறுகிறார். யோசுவாவும் தனது திட்டத்தில் தேவன் ஏற்படுத்திய இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டவனாக ஆசாரியர்களுக்கு இவ்வறிவுறுத்தலைக் கொடுக்கின்றான். நான் போட்ட திட்டம் சரியானது, அதை தேவன் அங்கீகரிக்க வேண்டும் என்ற மனநிலையில் அவன் இருக்கவில்லை. இதைப் போலவே நம்முடைய வாழ்வுக்கும் ஊழியத்திற்கும் நாம் வைத்திருக்கும் திட்டங்களைத் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ற விதத்தில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அப்பொழுது மாத்திரமே தேவன் நம்முடைய திட்டங்களை ஆசீர்வதிப்பார்.



**ஆ. தேவன் இஸ்ரவேலருக்காக செயல்படுகிறவராய் இருக்கின்றார்** (யோசுவா 3:9-13):

யோர்தான் நதியைக் கடந்து செல்வதற்கு அதன்நடுவில் தேவன் வழியை ஏற்படுத்தும் செயல், அவர் யோசுவாவோடு இருப்பதை மாத்திரமல்ல, அவர் இஸ்ரவேல் மக்கள் மத்தியிலும் இருக்கின்றார் என்பதையும், அவர்களுக்காகச் செயல்படுகின்றார் என்பதையும் வெளிப்படுத்தும் செயலாக இருந்தது. யோசுவா இதைப் பற்றி மக்களிடம் பின்வருமாறு கூறுகிறான்.

> யோசுவா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் இங்கே சேர்ந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளை கேளுங்கள் என்றான். பின்பு யோசுவா: ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவே இருக்கிறார் என்பதையும், அவர் கானானியரையும் ஏத்தியரையும் ஏவியரையும் பெரிசியரையும் கிர்காசியரையும் எமோரியரையும் எபூசியரையும் உங்களுக்கு முன்பாகத் துரத்தி விடுவார் என்பதையும், நீங்கள் அறிந்துகொள்வதற்கு அடையாளமாக: இதோ, சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்கு முன்னே யோர்தானிலே போகிறது. இப்பொழுதும் இஸ்ரவேல் கோத்திரங்களில் பன்னிரண்டுபேரை ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொருவராகப் பிரித்தெடுங்கள். சம்பவிப்பது என்னவென்றால், சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் குவியலாக நிற்கும் என்றான். (யோசுவா 3:9-13).

இவ்வசனங்களில் யோசுவா மக்களுடன் பேசும் வார்த்தைகள் தேவன் அவனுடன் பேசிய வார்தைகளாகவே உள்ளன. இதனால்தான் அவன் இஸ்ரவேல் மக்களிடம், “உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்” (யோசு.3:9) என்று தன்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றான். மோசேயைப்போல யோசுவாவும் இப்பொழுது தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பவனாக இருக்கின்றான். அதுவரை காலமும் மோசேயின் மூலம் மக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு பேசிவந்த தேவன் இப்போது யோசுவாவின் மூலம் பேசுகின்றார். யோர்தான் நதியை இஸ்ரவேல் மக்கள் கடக்கும் அற்புதச் செயலானது, தேவன் அவர்கள் நடுவில் இருக்கின்றார் என்பதையும், வாக்குத்தத்த தேசத்தில் குடியிருப்பவர்களை அவ்விடத்திலிருந்து அவர் துரத்திவிடுவார் என்பதையும் உறுதிப்படுத்தும் அடையாளமாக இருக்குமென்று யோசுவா கூறுகின்றார். அதாவது, இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த தேசத்திற்கு செல்வதற்காக தேவன் யோர்தான் நதியில் செய்யப்போகும் அற்புதம், அவர் இஸ்ரவேல் மக்களுக்காக செயற்படுகிறவர் என்பதை அறியத்தருகின்றது. இதைப்போலவே தேவன் நமக்காகவும் அற்புதமாகச் செயற்படுகிறவராக இருக்கின்றார்.

தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செயற்படுவதனால் அவரை "ஜீவனுள்ள தேவன்" என்று யோசுவா குறிப்பிட்டுள்ளான். உண்மையில், "யோர்தான் நதியில் வழியை ஏற்படுத்தும் தேவனுடைய செயல் அவர் ஜீவனுள்ளவர் என்பதை இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுத்தும்." தேவன் ஜீவனுள்ளவராக இருப்பதனால் அவர் செயல்படக்கூடியவராக இருக்கின்றார். அதுமாத்திரமல்ல, ஏனைய மதத்தினரின் தெய்வங்கள் செயல்படமுடியாத நிலையில் ஜீவன் அற்ற வெறும் சிலைகளாக இருக்கையில் (சங்கீதம் 96:5, 115:3-7), இஸ்ரவேல் மக்களுடைய தேவன் மாத்திரம் ஜீவனுள்ளவராக இருக்கிறார் என்பதையும், தேவன் அவர்களுக்காகச் செயல்படும்போது ஜீவனுள்ள தேவன் தங்களோடு இருக்கிறார் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்வார்கள். உண்மையில் "தேவன் மற்ற மதத்தினரின் தெய்வங்களைப்போல இராமல், ஜீவனுள்ளவராகவும், செயல்படுகிறவராகவும் இருக்கிறார்." வேறு தெய்வங்களை இவ்விதமாக ஜீவனுள்ளவைகளாகக் குறிப்பிட முடியாது. இதனால், "தேவன் மாத்திரமே மக்களுடைய வாழ்வில் இடைபடுபவராக இருக்கின்றார்." எனவே, தேவன் நம்மோடு இருப்பதையும் அவர் ஜீவனுள்ளவர் என்பதையும், அவர் நமக்காகச் செயல்படுகிறவர் என்பதையும் மற்றவர்கள் அறிந்துகொள்ளும் விதத்தில் நம்முடைய வாழ்க்கை இருப்பதற்கு நாம் தேவனின் வழிநடத்துதலுக்கு நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். அதாவது நாம் தேவ சித்தத்தின்படி வாழ்வதற்கு நம்மை முழுமையாக அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும். அப்பொழுது நாம் வழிபடும் தேவன் ஜீவனுள்ளவர் என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும் விதத்தில் தேவன் நம் வாழ்வில் செயல்படுவார்.

இஸ்ரவேல் மக்களின் தேவனே ஜீவனுள்ளவராக இருப்பதனால் அவரே "சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார்" என்பதையும் யோசுவா சுட்டிக் காட்டுகின்றான். ஆண்டவர் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "எஜமான்" அல்லது "ஆள்பவன்" என்னும் அர்த்தமுடையது. உண்மையில், தேவன் முழு உலகத்தினதும் உரிமையாளராகவும் ராஜாவாகவும் இருக்கிறார். அவர் இஸ்ரவேலின் தேவனாக அக்காலத்தில் அறியப்பட்டிருந்தாலும், முழு உலகத்தினதும் தெய்வமாக இருக்கின்றார். உண்மையில், முழு உலகமும் தேவனுடையது (சங்.24:1, 1கொரி.10:26) இதனால், அவர் தமது விருப்பத்தின்படி இஸ்ரவேல் மக்களுக்குக் கானான் தேசத்தை கொடுக்கக்கூடிய அதிகாரம் உடையவராக இருக்கின்றார். இதனால்,அவர் தாம் இஸ்ரவேல் மக்களுக்கு வாக்களித்த தேசத்தில் அச்சமயம் குடியிருந்த ஜாதியினரை அவ்விடத்திலிருந்து துரத்திவிடுவார் என்று யோசுவா கூறுகின்றான். "தேவனே பூமியனைத்தின் மீதும் ஆண்டவராய் இருப்பதனால் அவரது ஜனங்களான இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தைச் சுதந்தரித்தது அவர்கள் தாங்கள் உரிமை பாராட்டக்கூடிய தேசத்தைப் பெற்றுக் கொண்டதாகவேயுள்ளது." அதாவது, பூமியனைத்தும் தேவனுடையதாய் இருப்பதனால், இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தைத் தங்களுடைய தாக்கிக்கொள்ள உரிமையுடையவர்களாய் இருந்தனர். அவர்கள் பிற மனிதர்களுடைய தேசத்தை ஆக்கிரமிக்கவில்லை. தங்கள் சொந்த நாட்டையே தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டனர். உபா.32:8-9, அப்.17:26 போன்ற வசனங்கள் அறியத்தருவது போல, தேவன் ஒவ்வொரு ஜாதியின் குடியிருப்பின் எல்லைகளையும் தனிப்பட்ட மனிதரின் வாழ்விடங்களையும் குறித்து வைத்திருக்கிறார்.

10ம் வசனத்தில் அக்காலத்தில் வாக்குத்தத்த பூமியில் குடியிருந்த ஏழு ஜாதியினரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதியாகமம் 15:19-21ல் இப்பிரதேசத்தில் 10 ஜாதியினர் குடியிருப்பதாகவும், யாத்திராகமம் 3:17லும் யோசுவா 9:1 லும் 6 ஜாதியினர் குடியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆதியாகமம் எழுதப்பட்ட காலத்தில் ஆதி 15:19-21 அறியத்தருவதுபோல வாக்குத்தத்த பூமியில் 10 ஜாதியினர் இருந்தனர். ஆனால் யோசுவாவின் காலத்தில் யாத்திராகமம் 3:17லும் யோசுவா





## தேவன் நம்முடனும் பேச வாஞ்சிக்கின்றார்.





9:1லும் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல 6 ஜாதியினரே இருந்தனர். ஆனால் இவ்வதிகாரத்தில் 7 ஜாதி இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதற்கான காரணம், இங்கு "கானானியர்" என்ற சொல் வாக்குத்தத்த பூமியில் குடியிருக்கும் சகல ஜாதியினரையும் உள்ளடக்கிய பொதுவான பெயராக இருப்பதேயாகும். இதனால்தான் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் வாக்களித்த தேசம் "கானான்" என்றும், அங்கு குடியிருந்தவர்கள் "கானானியர்" என்றும் வேதாகமம் கூறுகின்றது (ஆதி.12:6, 36:2-3, யாத். 13:11, எசே.16:3). கி.மு. 1200ற்கு முற்பட்ட எகிப்திய குறிப்புகளில், கானான் என்பது அக்காலப் பாலஸ்தீனா தேசம் முழுவதையும் குறிப்பிடும் பெயராகவே உள்ளது. எனவே, அக்காலத்தில் கானான் தேசத்தில் குடியிருந்த கானானியர்கள் ஆறு ஜாதியினராகவே இருந்தனர். இஸ்ரவேலர் யோர்தான் நதியைக்கடக்கும் செயலானது, தேவன் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் இருக்கின்றார் என்பதையும், அவர் கானான் தேசத்தில் குடியிருக்கும் 6ஜாதியினரையும் அத்தேசத்திலிருந்து துரத்திவிடுவார் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் செயலாக இருந்தது. இதனால் இதை "நீங்கள் அறிந்துகொள்வதற்கு அடையாளமாக இதோ, சர்வ பூமிக்கும் ஆண்டவராக இருக்கிறவருடைய உடன்படிக்கைப்பெட்டி உங்களுக்குமுன்னே யோர்தானிலே போகிறது" என யோசுவா மக்களிடம் கூறினான். 12ம் வசனத்தில் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களிலுமிருந்து கோத்திரத்திற்கு ஒருவராக 12 பேரைத் தெரிவுசெய்யும்படி யோசுவா கூறுகிறார். ஆனால் இவர்கள் எதற்காக தெரிவுசெய்யப்பட்டனர் என்பதை 4ம் அதிகாரத்தில் அறிய முடிகிறது. இதை இவ்வதிகாரத்தில் சொல்லாமல், ஆசாரியர்களின் கால் யோர்தான் நதியின் தண்ணீரில் படும்போது என்ன நடக்கும் என யோசுவா விளக்கிக் கூறுகிறார். அவர்களது "உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்ட மாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் நீர் ஓடாமல் குவியலாக நிற்கும்" என்று கூறினான். தேவன் யோசுவாவிடம் சொல்லிய இந்தக் காரியத்தை அவன் முழுமையாக நம்பியவனாக இஸ்ரவேல் மக்களிடம் அதை கூறுகிறான். அவனுக்கு இதில் எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. இதைப்போலவே, நாம் தேவன் சொல்வதை முழுமையாக நம்பவேண்டும். அவரது வார்த்தையில் நாம் எவ்வித சந்தேகமும் கொள்ளக்கூடாது. அப்பொழுது மாத்திரமே அவர் நம் வாழ்வில் அற்புதமாய் செயல்படுவார்.


**தேவன் தாம் சொல்வதைச் செய்பவராய் இருக்கின்றார்** (யோசுவா 3:14-17):

இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியை கடந்து செல்லும் விதத்தில் தேவன் அதன் நடுவில் பாதையை உருவாக்கியசெயல், அவர் தாம் சொன்னதை செய்பவர் என்பதை நமக்கு அறியத்தருகின்றது. தேவன் யோசுவாவிடம் எதைச் சொன்னாரோ இதை அப்படியே செய்துள்ளதை இவ்வதிகாரத்தின் இறுதி வசனங்கள் அறியத்தருகின்றன.

> ஜனங்கள் யோர்தானைக் கடந்து போகத் தங்கள் கூடாரங்களிலிருந்து புறப்பட்டார்கள். ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை ஜனங்களுக்குமுன்னே சுமந்துகொண்டுபோய், யோர்தான்மட்டும் வந்தார்கள். யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டுபோம். பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே, மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர்வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது. உப்புக் கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று. அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள். சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்துதீருமளவும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையில் காலூன்றி நிற்கும்போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய் கடந்துபோனார்கள் (யோசுவா 3:14-17).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக்கடந்து வாக்குத்தத்த தேசத்திற்குள் செல்வதை இவ் வசனங்கள் அறியத்தருகின்றன. தேவன் யோசு வாவிடம் சொல்லியிருந்தபடியே உடன்படிக்கை பெட்டியைச் சுமந்து சென்ற ஆசாரியர்களின் கால்கள் யோர்தான் நதியின் தண்ணீரில் பட்ட உடனே ஆற்றின் வடபகுதியிலிருந்து ஓடிவரும் தண்ணீர் அப்படியே குவியலாக நின்று, இஸ்ர வேல் மக்கள் கடந்து செல்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தது. இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்த இடத்தில் தண்ணீர் குவியலாக நின்றதினால் சார்தானுக்கடுத்த ஆதாம் என்னும் ஊர் வரை தண்ணீர் தேங்கி நின்றது. இது, எரிகோவுக்கு வடக்கே 16மைல் தொலைவில் தற்காலத்தில் உள்ள "தெல் எத்-தாமியா" என்னும் ஊர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மேலும், இஸ்ரவேல் மக்கள் நதி யைக் கடந்த இடத்திலிருந்து சாக்கடல் என்று சொல்லப்படும் உப்புக்கடல் வரை இருந்த தண்ணீர் அக்கடலுக்குச் சென்றதாகவும் 16ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில ஆராய்ச்சியாளர்கள் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்த செயலை அற்புத சம்பவமாகவல்ல, இயற்கையான நிகழ்வாகவே கருதுகின்றனர். அதாவது. இந்நதியில் காலத் திற்குக் காலம் மண்சரிவு ஏற்பட்டு நதியின் தண்ணீர் ஓரிரு நாட்களுக்குத் தேங்கி நிற்பது வழக்கம் என்று கூறும் இவர்கள், இவ்விதமாக மண்சரிவு ஏற்பட்ட நேரத்திலேயே இஸ்ரவேல் மக்கள் நதியைக் கடந்து சென்றதாக வாதிடு கின்றனர். இவர்கள் குறிப்பிடும் மண்சரிவுகள் பூமியதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்டவைகள். எனினும் இவர்கள், மண்சரிவு ஏற்படும் நேரம் பார்த்து தேவன் இஸ்ரவேல் ஜனங்கள் அவ் விடத்தில் இருக்கும்படி செய்தது அற்புதமான செயல் என்றும் கூறுகின்றனர். ஆனால், மண் சரிவு ஏற்பட்டு ஆற்றில் தண்ணீர் தேங்கி நின்ற தாக வேதாகமம் கூறவில்லை. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து சென்ற ஆசாரியரின் கால்கள் நதியின் தண்ணீரில் பட்டவுடனே நதி யின் தண்ணீர் பிரிந்து குவியலாக நின்றதாகவே வேதாகமம் கூறுகிறது. மேலும், யோர்தான் நதியின் கரைகளில் காலத்துக்குக் காலம் மண் சரிவு ஏற்படுவது உண்மை என்றாலும், நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் காலத்தில் மண் சரிவு ஏற்படுவதில்லை. மண்சரிவுகள் ஏற்பட்ட தாகச் சுட்டிக்காட்டப்படும் ஆண்டுகளில் ஏற்பட்ட மண்சரிவுகளும் நதியில் வெள்ளம் பெருக்கெ டுத்து ஓடும் காலங்களில் ஏற்பட்டவைகளல்ல.


மேலும், மண்சரிவு ஏற்படும் நேரம் பார்த்து இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதிக்கரையில் இருக்கும்படி செய்த தேவனால், இந்நதியின் தண்ணீர் ஓடாமல் குவியலாக நிற்கும்படி செய்ய முடியாது என்று எண்ணுவது அர்த்தமற்றது. தாம் சிருஷ்டித்த இயற்கையின் மீது தேவன் அதிகாரமுடையவராக இருப்பதனால், அவரால் நதியின் ஓட்டத்தை நிறுத்தி தமது ஜனங்கள் அதைக் கடப்பதற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதைப்போலவே நம்முடைய வாழ்விலும் நாம் எதிர்நோக்கும் தடைகளைத் தகர்த்தெறிந்து நாம் செல்வதற்கான பாதையை அவர் ஏற்படுத்திக் கொடுப்பவராக இருக்கின் றார். "வெள்ளம் கரைபுரண்டு ஓடிய நதியைக் கடந்த இஸ்ரவேல் மக்கள் தங்கள் கால்களில் தண்ணீர் படாத விதத்தில் வெட்டாந்தரையில் நடந்து சென்றதைப்போலவே, நம்முடைய வாழ் வில் ஏற்படும் பிரளயங்களின்போது அவற்றினூ டாக நம்மை அழைத்துச் செல்லும் தேவன், நம் கால்கள் நனையாதவிதத்தில் அவற்றைக்கடக்க நமக்கு உதவிசெய்பவராய் இருக்கின்றார்."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யகாசியேல்



அதிகம் அறியப்படாத பல வேதாகம பாத்திரங்களுக்கூடாக தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். அதிலே ஒருவன்தான் யகாசியேல். யகாசியேல் (יַחֲזִיאֵל) என்பதன் அர்த்தம் தேவன் நம்மை உற்றுநோக்குகிறார் ('God Sees'/"Beheld by Jehovah God") என்பதாகும். அப்படியிருக்க உலகத்தால் அதிகம் அறியப்படாத நம்மைக்கொண்டும் - தேவ பிள்ளைகளைக் கொண்டும் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய முடியுமல்லவா!

வேதாகமத்திலே யகாசியேல் என்ற பெயரில் 5 நபர்களைக் காணலாம்

1. பென்யமீன் கோத்திரத்தானாகிய இவன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனாக இருந்தவன் (1நாளாகமம் 12:4)
2. ஒரு ஆசாரியன் (1நாளாகமம் 16:6)
3. ஒரு லேவியன் (1நாளாகமம் 23:19)
4. யோசபாத்தின் காலத்திலிருந்த ஒரு லேவியனாகிய தீர்க்கதரிசி (2நாளாகமம் 20:14)
5. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவனின் தந்தை (எஸ்றா 8:5).

இந்த ஐந்துபேரில் நாம் யோசபாத் ராஜாவின் காலத்திலிருந்த ஒரு லேவியனாகிய யகாசியேலைக் குறித்து இக்கட்டுரையில் கவனிக்கப் போகின்றோம்.



இவன் வேதாகமத்தில் காணப்படும் மிகப் பிரசித்திபெற்ற நபரல்ல. மோசே, பவுல் போன்ற ஒரு பெரிய ஊழியத்தைச் செய்தவருமல்ல. அநேகருக்கு வேதாகமத்தில் இப்படியொரு பெயரில் ஒரு கதாபாத்திரம் இருக்கின்றதா என்றுகூட அறியப்பட்டிராத ஒரு நபரே யகாசியேல். இவன் சிறிதுநேரம் தனது ஜனத்திற்கு ஒரு வெளிச்சத்தைக் காண்பித்து பிரகாசித்தவன். சற்று நேரம் தோன்றினாலும் தன்னுடைய முத்திரையை மிக அழுத்தமாகப் பதித்து மறைந்தவன்.

இவனைப்போன்ற சாதாரண மக்களாகிய நம்மையும் தேவன் பயன்படுத்தமுடியும் என்பதற்கு யகாசியேல் ஒரு சிறந்த உதாரணமாக திகழுகின்றான். தேவன் நம்மைத் தமது பெரிய நோக்கத்தில் பயன்படுத்துகிறார். நாம் செய்கின்ற காரியம் சிறியதாக இருந்தாலும், நாம் செய்கின்ற ஊழியம் அற்பமாக எண்ணப்பட்டாலும், தேவன் நம்மைக்கொண்டு செயற்பட சித்தமுள்ளவராக இருக்கின்றார் என்பதே மிகவும் ஆச்சரியமான காரியமாயுள்ளது.

யகாசியேலை தேவன் தெரிந்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் முக்கியமான ஒரு பாத்திரமாக அவனைப் பயன்படுத்துகின்றார். தமது ஒளியை அவன்மீது வீசி, அவனைத் தமது ஆவியால் நிரப்புகின்றார். இது குறிப்பிட்ட ஒரு சில மணித்தியாலமாகக்கூட இருக்கலாம். ஆனால், அந்த ஒரு நிமிடநேரத்தில் தேவன் கூறிய காரியத்தை ஜனங்கள் அவனுக்கூடாகக் கண்டுகொண்டனர். அந்த சொற்ப நேரத்திற்குள் அவன் தேவனுடைய செய்தியை உரத்த சத்தமாய் மக்கள் அனைவரும் கேட்கும்படி கூறி அறிவித்தான். யகாசியேல் தேவனுடைய செய்தியை யாருக்கு அறிவிக்கின்றான் என்பது இங்கு மிக முக்கியமானது. சகல யூதா கோத்திரத்தாருக்கும், எருசலேமிலுள்ள ஜனங்களுக்கும் தேவ செய்தியை அறிவிக்கின்றான். செய்தியை அவன் அறிவிப்பதற்கு முன்னரான சூழ்நிலையைக் கவனிப்பது அவசியமாகின்றது.

- இ. வஷ்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொதுவாக, வீதிக் கடவையில் சிவப்பு விளக்குகளைக் காணும்போது, நாம் சலித்துக் கொள்வதுண்டு. பேருந்தில் செல்லும்போது, சிவப்புவிளக்கு எரிவதினால், பேருந்து ஓட்டுநரும் பயணிகளும் முறுமுறுப்பதுண்டு. வாகனம் ஓட்டுபவர்கள் அநேகமாக இவ்வாறான சோதனைக்கு முகங்கொடுப்பார்கள். எமது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இப்படித்தான். சிலநேரங்களில் கர்த்தர் எமக்கு முன்பாக, "பச்சை விளக்கை" வைத்திருப்பார். ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்து முன்னோக்கிச் செல்லும்படி வழிநடத்துவார். இன்னும் சிலநேரங்களில் "சிவப்பு விளக்கை" எரியவிடுவதுண்டு. அதாவது, முன்னோக்கி செல்லாதபடி தடுத்து நிறுத்துவார். இன்னும் சில நேரங்களில் "மஞ்சள் விளக்கை" எரியவிடுவதுண்டு. அதாவது குறிப்பிட்ட காரியத்தைச் செய்துமுடிப்பதற்கு ஆயத்தமாகும்படி எச்சரிப்பார். இந்த மூன்றுவிதமான நடவடிக்கைகளையும் எமது வாழ்க்கையில் நாம் அனுபவிக்கவேண்டியிருக்கும்.

மோவாபியரும், அம்மோனியரும் வேறுசில ராஜாக்களும் சேர்ந்து ஒரு பெரிய இராணுவத்துடன் எருசலேம் மீது யுத்தம்பண்ண வந்தார்கள். இவ்வேளையில் எருசலேமிலிருந்தவர்கள் நம்பிக்கையிழந்த ஒரு சூழ்நிலை உருவாகி இருந்ததை உணர்ந்தனர். இதனால் ராஜாவாகிய யோசபாத் பயந்து, ஜனங்களோடு கர்த்தரைத் தேடுவதற்காக ஒருமுகப்பட்டவனாக, யூதா தேசமெங்கும் ஜனங்கள் அனைவரும் உபவாசம் இருக்க வேண்டும் என்று அறிவித்தான். அவ்வாறே ஜனங்கள் யாவரும் கர்த்தரிடத்தில் சகாயம்தேடி கூடிவந்தார்கள்.

ஏறத்தாள சிவப்பு விளக்கு எரிகின்ற நிலையில், யுத்தம்பண்ணாத நிலையில், ஜனங்கள் யாவரும் கர்த்தரைத் தேடி எருசலேம் ஆலயத்திற்கு முன்பாகக் கூடிவந்த நேரத்தில், யோசபாத் தேவனிடத்தில் ஜெபிக்கின்றான். இப்படி இன்று ஜெபிக்கின்ற தலைவர்கள் எத்தனைபேர்? துன்பம் வந்தநிலையில், தேவ பயத்துடன் ஜெபிக்கின்ற, தேவனிடத்தில் ஆலோசனைப்பெற முற்படுகின்ற ராஜாவைப் பெற்றுள்ள யூதா ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்தான். இப்படிப்பட்ட ஒரு தேசத் தலைவன் எமது நாட்டில் இருந்தால் எவ்வளவு சிறப்பாக தேசம் மாறும்? யோசபாத்துடன்கூட யூதா கோத்திரத்து மக்கள் அனைவரும் தேவனுக்குப் பயந்தவர்களாய் தேவாலயத்திற்கு முன்பாக வந்தார்கள்.

செய்வதறியாத நிலையில் யூதா கோத்திரத்தார் அனைவரும் அவர்களின் பெண்ஜாதிகளும் அவர்களின் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள் என 2நாளாகமம் 20:13ல் வாசிக்கிறோம். திகிலடைந்து, தவித்திருந்த அந்நேரத்தில், கர்த்தர் ஒரு மனிதனைத் தெரிந்தெடுத்து அவனுக்கூடாகப் பேசினார். இச்சபையின் நடுவிலிருந்த யகாசியேல் என்ற ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மீது கர்த்தரின் ஆவியானவர் இறங்கி, ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் செய்தியைக் கொடுத்தார்.

சபையின் நடுவே நின்றுகொண்டிருந்த ஒரு சாதாரண லேவியனுக்கூடாக தேவன் தமது செய்தியை தெளிவாக அறிவித்தார். அது பச்சை விளக்கை எரியவிடுவதற்கு முந்திய "மஞ்சள் விளக்காக" இருந்தது. யூதா கோத்திரத்து மக்கள் இனிமேல் அமைதியாயிராமல், அடுத்தக்கட்ட நிலைக்குள் கடந்து செல்லவேண்டிய நிலைமையை தேவன் யகாசியேலுக்கூடாக தெளிவுபடுத்தினார்.



யகாசியேல் சபையை பார்த்து சத்தமாகக் கூறுகின்றான், "சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்" (வச 15) "யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்"(வச 17). அத்தோடு அவன் நிறுத்திவிடவில்லை, "நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்கு பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்" (வச 15) "பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்" (வச 17). இதனை அவன் தனது சுயத்தில் அறிவிக்கவில்லை.

ஒரு பெரிய ராணுவத்திற்கு எதிராக யுத்தம்பண்ண வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை யகாசியேல் அறிந்தவனாக இதைக் கூறுகின்றான். இனி, பச்சை விளக்கு எரியப்போகின்றது. ஜனங்களை அவன் யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்துகின்றான். "இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது." (வச 15) "இந்த யுத்தத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; கர்த்தர் உங்களோடே இருக்கிறார்" (வச 17). என்று தேவன் அருளிய செய்தியைக் கூறி, தேசத்திலுள்ள சகல மக்களையும், இராஜாவாகிய யோசபாத்தையும், அவனுடைய யுத்த வீரர்களையும் இராணுவத்தையும் யுத்தத்துக்குத் தைரியமாகச் செல்லும்படி தூண்டினான். அதுமட்டுமல்ல, எவ்வாறு போரிடவேண்டுமென்பதையும் எங்கே எதிரிகளைச் சந்திக்கவேண்டும் என்பதையும் அவன் முன்னறி வித்தான். "நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்." (வச 16) "நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்." (வச 17) என அறிவுரை கூறி நாளைய தினத்திற்குக் காத்திருக்குமாறு யகாசியேல் மக்களுக்கு அறிவுறுத்துகின்றான்.


யூதா கோத்திரத்து ராஜா தேவன்பேரில் நம்பிக்கை உள்ளவனாய் இருந்தபடியால் முதலாவது என்ன செய்ய வேண்டும் என்று யகாசியேல் அவனுக்கு அறிவிக்கின்றான். எதிரிகள் எவ்வாறு வருகின்றார்கள், எங்கே அவர்களோடு போரிட்டால் ஜெயிக்கமுடியும் என்பதையும் அறியத்தருகின்றான். "இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டு வழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத் தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள்." (வச 16). என்றான்.

யகாசியேலின்மூலம் தேவன் பேசிய வார்த்தைகளுக்கு யூதா கோத்திரத்தார் செவிகொடுத்தார்கள். யோசபாத் இராஜா தரைமட்டும் குனிந்து வணங்கி உரத்த சத்தமாய், "யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்" (2நாளா. 20:20) என்றான். அவ்வாறே, லேவியர்களும் மற்றவர் களும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் துதிக்க எழும்பினார்கள். ஜனங்கள் யாவரும் அதிகாலையில் விழித்தெழுந்து, அம்மோனியர், மோவாபியர், ஏதோமியரின் சேனையை எதிர்க்க அணிவகுத்துச் சென்றனர்.

யகாசியேலின் தீர்க்கதரிசனத்தின்படி, இறுதியில், கர்த்தர் யூதாவுக்காக யுத்தம்பண்ணினார். "அம்மோன் புத்திரரும் மோவாபியரும் ...சேயீர் குடிகளை அழித்து தீர்ந்தபோது, தாங்களும் தங்களில் ஒருவரையொருவர் அழிக்கத்தக்க விதமாய்க் கைகலந்தார்கள். யூதா மனுஷர்... அந்த ஏராளமான கூட்டம் இருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்து கிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை. தேவ மக்கள் உண்மையிலேயே தேவனுடைய இரட்சிப்பைக் கண்டார்கள்" (2நாளாகமம் 20:23,24) இதற்கெல்லாம் காரணம், கர்த்தரின் ஞானமும் வழிநடத்துதலும் நிறைந்த வார்த்தைகள் யகாசியேலுக்கூடாக யூதா கோத்திரத்தாருக்கு தெரிவிக்கப்பட்டமையே. அவர்களின் பயமும் மனக்கலக்க மும் நீங்கி தைரியத்தையும் நம்பிக்கையுமடைந்தனர்.

யகாசியேலினூடாக வெளிப்பட்ட தேவனின் வார்த்தைகள், தேவ மக்களை தைரியப்படுத்தியது. இவனைக்குறித்து வேதாகமத்தில் இதற்குமுன் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இதற்கு பின்பும் அவனது பெயர் புகழப்படவில்லை. யோசபாத் ராஜாவின் வெற்றியின் பின்னர் அவன் பாராட்டப்பட்டதாகக்கூட எழுதப்படவில்லை. எனினும் சபையிலிருந்த முகமறியாத லேவியனுக்கூடாக கர்த்தர் மிக முக்கியமான ஒரு அத்தியாவசியமான தேவ செய்தியை யூதா கோத்திரத்தாருக்கு அறிவிக்க அவனைப் பயன்படுத்தினார். தேவ செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு தாசனாக செயற்பட்டான்.

இன்றும் பிரசித்திபெறாத அநேக தேவ பிள்ளைகளுக்கூடாகவும், விசுவாசி களுக்கூடாகவும், தேவன் பல அற்புதங்களை நடப்பித்து வருகின்றார். இன்று நமக்கூடாகவும் தேவராஜ்யத்திற்கு மகிமைகொண்டுவரத் தக்க காரியங்களைச் செய்யவே அவர் வாஞ்சிக்கிறார். அதற்கு நாம் ஆயத்தமா! பரிசுத்தஆவியானவர் நம்முடைய வாழ்வில் செயற்படத்தக்கதாக, கர்த்தருடைய கையிலே நமது வாழ்வை அர்ப்பணித்திருப்போமாயின், அவரது நாமம் மகிமைப்படத்தக்க விதத்தில் நம்மையும் அவரே உபயோகிப்பார். யகாசியேலைப்போல உரிய நேரத்தில் மிகப் பிரயோஜனமான செயலை, தேவ ராஜ்யத்திற்குரிய பணியில் செய்து முடிக்க தேவன்தாமே உங்களையும் பயன்படுத்துவாராக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சோலை

## பெப்ரவரி-மார்ச் சஞ்சிகையில்

*கண்டுபிடிப்பிற்கான சரியான பதிலை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள்:*

- க.டில்ஷான் - நாவற்குடா
- கொ. கீர்த்தனா - நாவற்குடா
- க. அபிணி - வத்தளை
- ரேவன் பென்யமீன் - வத்தளை
- நா. இசைவாணி - முக்கொம்பன்
- ஏ. ரேச்சல் - கல்முனை - 3
- பி. டிலுக்ஷி - எட்டியாந்தோட்டை
- எஸ்தர் மேரி - இரத்தினபுரி

கண்டுபிடிப்பிற்கான சரியான வித்தியாசங்கள்

1. மேகம்
2. ஓடு
3. கூரைமீது மேகம்
4. சிறு அலை
5. பூ
6. புல்
7. இடுப்பு பட்டி
8. சிவிங்கியின் புள்ளி





## ஏப்ரல்-மே சஞ்சிகையில்

*கண்டுபிடிப்பிற்கான சரியான பதிலை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள்:*

- ச. ராகவி - தெகிவளை
- காருண்யா - தெகிவளை
- ஏ. ஜக்சான் - யாழ்ப்பாணம்
- அனுஜிற்றா தவறஞ்சிற் - யாழ்ப்பாணம்
- ஸ்டீவ் ஜோசப் - கொழும்பு 10
- ஸகினா ஏஞ்சல் - மட்டக்குளிய
- கெல்வின் ஜோண்சன் - வத்தளை
- மாற்கு பிரசான் - நாவலப்பிட்டிய
- லாவனியா மகேஷ்வரன் - சரசவிகிராமம்

கண்டுபிடிப்பிற்கான சரியான வித்தியாசங்கள்

1. சிலையின் கழுத்து
2. மேகம்
3. இடுப்பு பட்டி
4. நீல நிற கல்
5. நெருப்பு
6. சிங்கத்தின் காது
7. குகையில் கல்
8. விரிப்பில் வெள்ளை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு நாள் ஒரு சின்ன பையன் தன் அம்மாவுடன் கடைக்கு போனான். அந்தக் கடைக்காரர் பையன் அழகாக இருக்கானே என்று சொல்லிவிட்டு பாட்டிலில் இருந்து சொக்லேட்டை காட்டி எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோப்பா என்றார்.

ஆனால் அந்த பையன் சொக்லேட்டை எடுக்கவே இல்லை. கடைக்காரர் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் எடுக்கவில்லை. அதைப் பார்த்த அவன் அம்மா சொக்லேட் பாட்டிலில் இருந்து எடுத்துக்கோ என்றார். அப்பவும் அவன் சொக்லெட்டை எடுக்கவே இல்லை.

பிறகு அந்த கடைக்காரரே சொக்லேட்டை அள்ளி அவன் கைகளில் வைத்தார். அவன் ஆசையுடன் இரண்டு கைகளாலும் வாங்கிகொண்டான்.



வீட்டிற்கு போனவுடன் அவன் அம்மா ஏன் சொக்லேட்டை பாட்டிலில் இருந்து நீயே எடுத்து கொள்ளவில்லை என்று கேட்டார்.

அம்மா என் கையை பாருங்கள் எவ்வளவு சின்னதா இருக்கிறது. நானே பாட்டிலில் இருந்து எடுத்து இருந்தால் எனக்கு கொஞ்சமாக தான் கிடைத்திருக்கும் இப்ப பாருங்க அவர் எடுத்து கொடுத்ததால் எவ்வளவு அதிகமா சொக்லேட் கிடைச்சிருக்கு பாருங்கள் என்றான்.

எதையுமே நாமாகத் தேடி நாடிப்போனால் குறைவாகத்தான் கிடைக்கும். அதுவாகவே தேடி நாடி வந்தால் நிறைவாக கிடைக்கும்...

**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன்!!

## மணமகள் விபரம்

(2013/E.F/2476) வயது 25, உயரம் 5'. ஜீவ இல்லம் சபை, யாழ் பல்கலைக்கழக B.A கற்று, சபை ஊழியங்களில் ஈடுபடுகின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 4).

▸ ▸ ▸

(2013/E.F/2477) வயது 39, A.O.G சபை, பத்தாம் வகுப்பு வரை கற்று, ஊழியம் செய்கின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 2).

▸ ▸ ▸

(2013/E.F/2478) வயது 26, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, ஆசிரியராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2013/E.F/2479) வயது 44, உயரம் 5'3". Gospel Tabernacle Church, Pharmacist Executive ஆக பணிபுரியும் மணமகளுக்கு, வெளிநாட்டு மணமகனைத் தேடுகின்றனர். (கல்கிஸ்சை).

▸ ▸ ▸

(2013/E.F/2480) வயது 42, உயரம் 4'9". A.O.G சபை, தனியார் துறையில் சாதாரண தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர் (பலாங்கொடை). (இவர்களைப் பற்றிய மேலதிக விபரங்களை நேரடியாக தொடர்பு கொள்ளும் போது மாத்திரம் அறிந்துகொள்ளுங்கள்.)

▸ ▸ ▸

(2013/E.F/2481) வயது 24, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, Accounting பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 12).

▸ ▸ ▸

(2013/E.F/2482) வயது 34, உயரம் 5'1". இயேசு ஜீவிக்கிறார் சபை. Diploma கற்று, Ass. Accountant ஆக, கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

▸ ▸ ▸

**ஏதேன் விபரங்களைப் பெற:**

- இங்கு வெளிவரும் விளம்பரங்களில், "பொருத்தமானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள் தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்புகொள்வர்.
- இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மைக் குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.
- ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**ஏதேன் சஞ்சிகையில் பிரசுரிக்க:**

- உங்கள் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்ப படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.
- உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2013 ஜூலை 15ம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாயின் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.
- உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படாவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படும் இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
- இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு:

**"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2013/E.F/2483) வயது 32, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்ற இரட்சிக்கப்பட்ட மணமகளுக்கு, சாதாரண தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். (செங்கலடி).

▸ ▸ ▸

(2013/E.F/2484) வயது 43, A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்ற மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர்(கொழும்பு 5).

▸ ▸ ▸

(2013/E.F/2485) வயது 39, உயரம் 5'3". A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, தையல் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 3).

▸ ▸ ▸

(2013/E.F/2486) வயது 34, உயரம் 5'2". R.C சபை, க.பொ.த(உ/த) கற்று, Diploma in Computer Science, Business Studies கற்று Accounts Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கண்டி).

▸ ▸ ▸

(2013/E.F/2487) வயது 30, உயரம் 5'3". ஜீவ மார்க்க சபை. தாதியாக உத்தியோகம்புரியும் மணமகளுக்கு, அரசாங்க தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

▸ ▸ ▸

(2013/E.F/2488) வயது 33, உயரம் 5'2". மெதடிஸ்த சபை, க.பொ.த(உ/த) கற்று, சமூக பணியிலும் கிறிஸ்தவ கல்வியிலும் சிறப்பு தேர்ச்சி பெற்று சிறுவர் இல்ல பொறுப்பாளராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கல்குடா).

▸ ▸ ▸

(2013/E.F/2489) வயது 43, R.C சபை, 8ம் வகுப்பு வரை கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2013/E.F/2490) வயது 37, உயரம் 5'4". Church of Revival Ministries, B.Sc. கற்று, வைத்திய ஆய்வுக்கூட தொழிநுட்பவியலாளராக கடமையாற்றும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

▸ ▸ ▸

# மணமகன் விபரம்

(2013/E.M/3246) வயது 25, உயரம் 5'7". எக்காளத்தொனி பூரண சுவிசேஸ சபை, க.பொ.த(உ/த) கற்று, இலங்கை போக்குவரத்து சபையில் பரிசோதகராகவும் பகுதிநேர ஊழியத்திலும் ஈடுபட்டுள்ள மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (ஊர்காவற்துறை).

▸ ▸ ▸

(2013/E.M/3247) வயது 31, உயரம் 5'4". R.C சபை, க.பொ.த(சா/த) கற்று, Chef ஆக வெளிநாட்டில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கண்டி).

▸ ▸ ▸

(2013/E.M/3248) வயது 28, உயரம் 5'8". A.O.G சபை, லண்டனில் பகுதிநேர தொழில்புரியும் மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றனர். (வவுனியா).

▸ ▸ ▸

(2013/E.M/3249) வயது 43, உயரம் 5'9". A.O.G சபை, Computer Software Instructor ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, பக்தியுள்ள மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

▸ ▸ ▸

(2013/E.M/3250) வயது 30, உயரம் 5'3". மெதடிஸ்ட் சபை, BA பட்டதாரி, ஆசிரியராக அரச பணிபுரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (டிக்கோயா).

▸ ▸ ▸

(2013/E.M/3251) வயது 28 உயரம் 6'9". மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கந்தானை).

▸ ▸ ▸

(2013/E.M/3252) வயது 37, உயரம் 5'5". B.Sc., PDDE கற்று தற்போது விஞ்ஞான ஆசிரியராக வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (இரத்தினபுரி).

▸ ▸ ▸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of Post of Sri Lanka under No. QD/106/News/2013


BACK TO THE BIBLE
சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo, Sri Lanka.

To:

T \ 13422 \ 1 \ JAN2014
Ms J Vathshala
Methodist Church
Kaluwanchikudy 30200

**சத்தியவசனம் சஞ்சிகையை தொடர்ந்தும் பெற்று வருகின்றீர்களா?**
**அல்லது முதன்முறையாக படித்துக் கொண்டிருக்கிறீர்களா?**




1. இந்தச் சஞ்சிகை எப்படி உங்களுக்குப் பிரயோஜனமாய் இருந்தது என எங்களுக்கு எழுதுங்கள்.

2. மற்றவர்களுக்கு இந்தச் சஞ்சிகையை அறிமுகப்படுத்துங்கள்.

3. சஞ்சிகை மற்றும் தியான நூலினைப் தொடர்ந்து பெற தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, தபாலினூடாகவோ உங்கள் தெளிவான முகவரியை தெரியப்படுத்துங்கள்.

4. இந்தச் சஞ்சிகை ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

5. வருடத்திற்கு ஒருமுறை உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

6. பிறரும் சஞ்சிகையைப் பெறும்படிக்கு உங்கள் பொருளாதாரத்தினால் இந்த ஊழியத்தை தாங்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org